Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 15 ஞாயிற்றுக்கிழமை (29.03.2015) பக்கங்கள் 20 ஓசை – 180

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## யாழ்.இளைஞர்கள் பொலிஸ் சேவையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் சீர்குலைந்துள்ள சட்டம் ஒழுங்கை சீர் செய்வதற்காக மேலும் 400 தமிழ் பொலிசாரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்காக யாழ். இளைஞர் யுவதிகள் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட வுள்ளனர்.

முதற்கட்டமாக யாழ். மாவட்டத்தில் 200 இளைஞர்களையும் 200 யுவதிகளையும் பொலிஸில் இணைத்துக் கொள்ள வுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் உத்தியோக

19 ஆம் பக்கம் பார்க்க

## ரணில் இன்று முல்லையில்

வடக்கிற்கு மூன்று நாள் விஜயத்தினை மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று முல்லைத தீவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 2.00 மணிக்கு முல் லைத்தீவு மாவட்ட காரியாலயத்

19 ஆம் பக்கம் பார்க்க

## தாதியர்கள் 160பேர் வடக்கில் நியமனம்

வட மாகாண வைத்திய சாலைகளில் தாதியர்களுக்கான பற்றாக்குறை நிலவும் நிலையில் மாகாண சபைக்குட்பட்ட வைத் தியசாலைகளில் கடமையாற்ற புதிய தாதிய அலுவலர்கள் 160 பேருக்கு நியமனம் வழங்கப்பட வுள்ளது என வடமாகாண சுகாதார அமைச்சின் செயலா ளர் எஸ்.ரவீந்திரன் தெரிவித் துள்ளார். நாளை இலங்கை தாதிய பயிற்சிக் கல்லூரிகளில் தமது பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்து பரீட்சையில் சித் தியடைந்த தாதிய அலுவலர் களுக்கு ஜனாதிபதி அலுவல கத்தில் வைத்து நியமனங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற வுள்ளது. இதனைத் தொடர்ந்து

19 ஆம் பக்கம் பார்க்க

# புலிகளுக்கு தடை நீடிப்பு எமக்கு வெற்றி



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீடித்துள்ளமை எமது புதிய அரசுக்கு கிடைத்த வெற்றி என்று பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பலாலி படைத்தளத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வைபவம் ஒன்றிலேயே ரணில் விக்கிரம சிங்க மேற்கண்டவாறு தெரிவித் தார்.

நாட்டின் தேசிய பாதுகாப் புக்குப் பாதிப்பு ஏற்படாத வகை யில் இனப்பிரச்சினைக்கு அரசி யல் தீர்வுத் திட்டம் வழங்கப்பட வேண்டும் எனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள் ளார். பலாலி படைத் தலைமை யக மைதானத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்ட நிகழ்வில் உரையாற் றிய போதே பிரதமர் ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்

19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் மீது தடை நீடிப்பு




(ஜெனீவா)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் மேலும் நீடித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன் றத்தின் உத்தரவை கணக்கில் எடுக்காது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீடிக்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது என வெளி விவகார பிரதி அமைச்சர் அஜித். பி.பெரேரா தெரிவித் துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையைத் தொடர்ந் தும் பேண முடியாது என்று, கடந்த வருடம் ஐரோப்பிய ஒன்றியத்தின் நீதிமன்றம் அறி வித்திருந்தது. இந்த தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய மூன்று மாத கால அவகாசமும் வழங் கப்பட்டிருந்தது.

எனினும் இந்த தீர்ப்பைக் கருத்தில் கொள்ளாமல், விடு தலைப் புலிகளின் தடையை மேலும் நீடிப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளதாக வெளி விவகார பிரதி அமைச் சர் தெரிவித்துள்ளார்.

## யாழ்.வாசிகள் இருவர் கட்டுநாயக்காவில் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று அதி காலை கைது செய்யப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் நடை பெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியை பார்ப்பதற்காக செல லும் வழியில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு செல் வதற்காக இவர்கள் இருவரும் போலி ஆவணங்களை சமர்ப் பித்திருப்பதாக குற்றம் சாட் டப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய் யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.

## கிராமிய பொருளாதாரத்தில் பெண்களுக்கு முக்கியபங்கு

### எங்களின் ஒத்துழைப்பு என்றும் உண்டு



கிராமியப் பொருளாதா ரத்தைப் பாதுகாத்து பலப்படுத் துவதற்கு பெண்களின் பங்கு மிக முக்கியமானதென ஈழ மக் கள் ஜனநாயகக் கட்சியின் செய லாளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள ஈ.பி.டி.பியின் தலைமை அலுவலகத்திற்கு வருகை தந் திருந்த மாதர் சங்கப் பிரதிநிதி களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் சமூகத்தில் மாற்றங்களை யும் ஏற்றங்களையும் ஏற்படுத்தக் கூடிய வகையில் பெண்கள் தாம் சார்ந்து வாழும் பகுதிக ளில் கிடைக்கப்பெறக் கூடிய வளங்களை உரிய முறையில் பயன்படுத்தி சுயதொழில் துறை களை முன்னெடுக்க வேண்டும்.

குறிப்பாக பனை, தென்னை என்பவற்றிலிருந்து கிடைக்கப் பெறக்கூடியதான மூலப்பொருட களைக் கொண்டு சுயதொழிற் துறைகளை முன்னெடுக்கும்போது அதனூடாக வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள முடியும்.

அதுமட்டுமன்றி இவ்வாறான தொழிற்துறைகளைக் கூட்டாக முன்னெடுக்கும்போது வருமா

19 ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரியின் சகோதரன் மரணம்



கோடாரியினால் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் கொழும்பு வைத் தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இளைய சகோதரரான பிரியந்த சிறி சேன நேற்று அதிகாலை உயிரிழந் துள்ளார்.

இவர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட் டிருந்த நிலையில் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை கோடாரியினால் தாக்கியதாக கூறப்படும் சந்தேகநபரை எதிர்வரும் 8ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதி மன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட் டுள்ளது.

பொலனறுவையில் வைத்து கோட ரியால் தாக்கப்பட்ட பிரியந்த சிறிசேன பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக விசேட ஹெலிகொப்டர் மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல் லப்பட்டார்.

19 ஆம் பக்கம் பார்க்க




தமிழரசுக் கட்சி அறிவித்தபடி அகிம்சைப் போரை தொடங்காத 89 வது நாள்

# தலைதூக்குகிறது ஆட்டுத்திருட்டு

மட்டுவில் பகுதியில் மீண்டும் ஆடுகள் திருட்டுப் போகும் சம்பவங்கள் தலைதூக்கத் தொடங்கியுள்ளன.

வீதியோரங்களிலும் வெற்றுக காணிகளிலும் இவ்வாறு மேச்சலுக்காக கட்டப்படும் ஆடுகள் மிகச் சாதூரியமாக அனைவரினது கண்களிலும் படாது திருடப்படுகின்றது.

கடந்த வியாழனன்றும் நுணாவில் பருத்தித்துறை வீதியில் மடத் தடிச் சந்திக்கு அருகில் வீதியோரம் கட்டப்பட்டிருந்த ஒரு மறி ஆடு சாதுரியமாகத் திருடப்பட்டுள்ளது.

இத்திருட்டுக்கு மூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றது வாகனம் பழுதடைந்துள்ளது போன்று நடித்து ஆடுகள் திருடப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | ஞாயிற்றுக்கிழமை |
|---|---|
| Am 05.00-07.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00-08.00 | MORNING SONG |
| Am 08.00-09.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00-10.00 | புதுயுகம் |
| Am 10.00-10.30 | தமிழ் பேசு தமிழா (R) |
| Am 10.30-11.30 | அதிர்வுகள் (R) |
| Am 11.30-12.00 | காதல் கீதங்கள் |
| Am 12.00-12.30 | Hello சிரிக்க சிரிக்க DD |
| PM 12.30-01.00 | ஆரோகணம் |
| PM 01.00-04.00 | சிறப்பு திரைப்படம் |
| PM 04.00-05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00-06.00 | அதிர்வுகள் (R) |
| PM 06.00-07.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00-07.30 | IT.Com |
| PM 07.30-08.00 | மக்கள் முகம் |
| PM 08.00-08.20 | பிரதான செய்தி |
| PM 08.20-08.30 | Song |
| PM 08.30-09.00 | இதய ஊஞ்சல் |
| PM 09.00-11.30 | ஆங்கிலத்திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30-12.00 | நீங்காத நினைவுகள் |


44 ஆவது பிறந்த நாளைக்காணும்
சின்னையா சிவராசா
(தோழர் போல்)



தோழமைக்கு தோற்றமான தோழரே-மக்கள்
சேவையே நித்தம் சித்தம் கொள்ளும் சிவராசரே
மிளிருது உமது சேவை வேலணை எங்கும்
ஒளிர வேண்டும் இன்னும் பலர் வாழ்வு உம்மால்
எவ்வகை துன்பம் வந்திடினும்
மக்கள் சேவையை மறவா மறவனே
வாழ்க என்றும் வாழ்க.....

வாழ்த்துவோர்
நண்பர்கள்
வேலணை
(ஒ/3494)


# தெல்லிப்பழை வைத்தியசாலையின் தேவைகள்;
# பிரதிச்சுகாதார அமைச்சரிடம் மகஜர்



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு நேற்று விஜயம் செய்த பிரதிச் சுகாதார அமைச்சர் ஹசன் அலியிடம் வைத்திசாலையின் பற்றாக்குறைகள், தேவைகள் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தினாலும் மற்றும் நோயாளர் நலன்புரி சங்கத்தினாலும் மகஜர்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

வட பகுதியில் மனநோயளர் விடுதி மற்றும் புற்றுநோய் விடுதிகள் உட்பட சகல விடுதிகளையும் கொண்ட ஒரு பாரிய வைத்தியசாலையாக இருக்கின்ற போதிலும் இந்த வைத்திய சாலையில் தாதியர்கள் மற்றும் வைத்தியர்களுக்கான பற்றாக்குறைகள் நிலவுவதாகவும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் தற்போது இரண்டு சத்திரசிகிச்சை கூடங்களும் சிறிய அளவில் இரண்டு சத்திரசிகிச்சைக் கூடங்களும் உள்ள போதிலும் போதிய வைத்திய நிபுணர்கள் இன்மையால் முழுமையான தேவைக்கு சத்திர சிகிச்சை கூடத்தை பயன்படுத்த முடியாத தன்மை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இத்துடன் வைத்திய சாலையை மாவட்ட பொது வைத்தியசாலையாகவோ அன்றி மாகாண பொது வைத்தியசாலையாகவோ மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கைகள் சம்பந்தமாக பதிலளித்த பிரதி அமைச்சர் இவைகளை செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை தன்னால் முடிந்தளவுக்கு மேற்கொள்வதாகவும் உறுதியளித்துள்ளார். வைத்தியசாலையின் வைத்தியட்சகர் எம்.உமாசங்கர் மகஜரை பிரதி அமைச்சரிடம் கையளித்தார்.

# குருத்தோலை ஞாயிறு ஆராதனை இன்று

யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெற்றுவரும் ஈழத்துக் கல்வாரித் திருவிழாவில் இன்று காலை 6 மணிக்கு குருத்தோலை ஞாயிறு ஆராதனை வழிபாடுகள் பக்தி பூர்வமாக நிகழுமென பங்குத்தந்தை அருட்திரு ரெஜிராஜேஸ்வரன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் குருத்தோலை ஆசிர்வழங்கம் குருத்தோலைப் பவனியும் இடம்பெறுவதைத் தொடர்ந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

விசுவாசிகள் வருகைதந்து அடைக்கல அன்னை ஊடாக யேசுகிறிஸ்துவிடம் அருள் பெற்றுப் பயனடையுமாறு பங்குத்தந்தையும் மக்களும் அழைப்பு விடுத்துள்ளனர். (68)

# வடமராட்சியில் அழிக்கப்படும் பனை வளங்கள்

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் அண்மைக்காலமக பனை வளங்கள் அழிக்கப்பட்டு வருவதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கற்பகதரு எனப்போற்றப்படும பனை மரம் காணப்படும் இடமெங்கும் தமிழன் வாழ்ந்தான் என தமிழரின் இருப்பை பறைசாற்றும் பனை மரத்தின் தன்மையை அறியாது அதனை வெட்டி அழித்து வருகிறார்கள்.

பனை மரம் ஒன்று விதையாக வளர்ந்து பயன்பெறுவதற்கு நீண்டகாலம் தேவைப்படுகிறது. இவ்வாறு தொடர்ச்சியாக அழிக்கப்படும் செயற்பாட்டால் இனி வரும் காலங்ளில் பனை வளம் இல்லாது போகும் ஆபத்தும் ஏற்படும் என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பனையிலிருந்து பெறப்படும் பனங்கிழங்கு ஒடியல், பனாட்டு போன்ற பனை உற்பத்திப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதோடு பனையை நம்பி தொழில் செய்யும் தொழிலாளர்களும் பாதிப்படைவதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். (18)

# பொதுக் கூட்டம்

செம்மணி இந்து மயான சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

சபைத்தலைவர் சி.இலட்சுமிகாந்தன் தலைமையில் மயான மண்டபத்தில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக் வடமாகாண சபையின் அவைத் தலைவர் ச.வீ.கே.சிவஞானம் கலந்து கொளளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்குப் பிரதேச சபையின் தலைவர் வ.க.துரைசிங்கம், செயலாளர் மற்றும் இப்பிரதேச கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் செம்மணி மயான சபைக்கான நடப்பு வருட உத்தியோகத்தர்கள் தெரிவு இடம் பெறவுள்ளது. (137)

# யோகர் சுவாமிகளின் குருபூசை தினம்

யோகர் சுவாமிகளின் குருபூஜை நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. முற்பகல் 10 மணியளவில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, "யோகர் சுவாமிகளின் அருட் பார்வையும் ஆற்றுப்படுத்தலும்" என்னும் தொனிப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

தெல்லிப்பளை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் பண்ணிசை, தேவாரம் என்பன இடம்பெறவுள்ளன. (137)

# வெங்காயத்தின் விளைச்சலைப் பெருக்க புதிய திட்டம் அறிமுகப்படுத்த ஏற்பாடு

## வடமாகாண விவசாயத்திணைக்கள பிரதிப்பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பயிரிடப்படும் வெங்காயத்தின் மூலம் ஒரு ஹெக்டேயருக்கு 14 முதல் 15 மெற்றிக் தொன் விளைச்சல் பெறப்படுகின்றது. இதனை மேலும் அதிகரிப்பதற்கான புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக வடமாகாண விவசாயத்திணைக்கள பிரதிப்பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெங்காய உற்பத்தியாளர்களுக்கு 'திகடிக்க' வெங்காயப் பூவில் இருந்து பெறப்பட்ட விதையை வழங்கினோம். அத்துடன் வெங்காய உற்பத்தியாளர்களுக்கு உயிர்க்கரி செய்வதற்குரிய உபகரணங்களையும் பயிற்சியையும் வழங்க திட்டமிட்டுள்ளோம்.

எமது திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி வெற்றியளித்துள்ளமையால் இவ்வருடம் உயிர்க்கரியை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தவுள்ளோம்.

மண்ணின் வளத்தை 5,000 வருடங்கள் குன்றாமல் பாதுகாக்கும் திறன் உயிர்க்கரிக்கு உள்ளது. உயர் வெப்பத்தினால் கருக்கப்பட்ட இந்த உயிர்க்கரியை வெங்காயச்செய்கைக்கு மட்டுமல்லாது ஏனைய பயிர்ச் செய்கைக்கும் பயன்படுத்த முடியும்.

நீரை உறிஞ்சி வைத்திருந்து பயிரை குளிர்மையடையச் செய்யும் ஆற்றல் உயிர்க்கரிக்கு உண்டு என அவர் தெரிவித்தார்

# விபத்துக்களற்ற நாடொன்று செயற்றிட்டம் நெல்லியடியில்



"விபத்துக்களற்ற நாடொன்று" செயற்றிட்டம் 100 நாள் வேலைத் திட்டத்துக்கு அமைவாக நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

துவிச்சக்கர வண்டிகளில் எதிரொளி விளக்கு பாதுகாப்பு ஸ்ரிக்கர்களை ஒட்டும் நாடளாவிய செயற்றிட்டம் அண்மையில் வடக்கு, கிழக்கு பகுதிகளை உள்ளடக்கி முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதற்கமைவாக நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுமித் பெரரோ தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் அப்பகுதியில் வசிப்பவர்களின் துவிச்சக்கர வண்டிகளுக்கு எதிரொளி விளக்கு பாதுகாப்பு ஸ்ரிக்கர்களை ஒட்டும் நடவடிக்கை இடம்பெற்றது. வீதி விபத்துக்களில் அதிகமான துவிச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் மரணிப்பதே இச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தக் காரணமாகும். (18)

# பாராட்டு விழா



(யாழ்ப்பாணம்)

வ/வெளிக் குளம் கனிஷ்ர உயர்த ர வித்தியாலயத்தின் சிரேஷ்ர ஆசியை திருமதி.தேவராணி சிவராஜ சேகரம் 60 வயதை பூர்த்தி செய்து சேவையிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு பாடசாலை சமூகத்தால் பாராட்டு விழா நடாத்தப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற இந் நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களால் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டுவர வேற்கப்பட்டுவர வேற்புரையும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து பிறந்த நாள் நிகழ்வாககேக் வெட்டி, பரிசில்கள் வழங்கப்பட்டு, வாழ்த்துப்பா வாசிக்கப்பட்டது. (70)

# நீர்க் குழாயில் சேதம் மக்கள் சிரமத்தில்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கிராமத்துக்கு அல்லைப்பிட்டி பரவைக்கடலூடாக வழங்கப்பட்டு வரும் குழாய் மூலமான குடிநீர் வழங்கும் நடைமுறை தடைப்பட்டுப் போனதால் மண்டைதீவு மக்கள் குடிநீரைப் பெறுவதற்காக பெரும் சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில நாட்களாக இந்த நீர் வழங்கல் தடைப்பட்டுள்ளது. மண்கும்பானில் இருந்து வழங்கல் நடைபெறும் நீர்ப் பாதையில் பல முறை சேதம் ஏற்பட்டு இருந்தது.

மண்டைதீவு - அல்லைப்பிட்டி இடையேயான பரவைக் கடலை நீர்குழாய் ஊடறுக்கும் பகுதியில் வழமையாக சேதம் ஏற்படும். இந்தக் கடலை கடந்து செல்லும் கால்நடைகளால் இவை சேதமடையவாய்ப்புண்டு.

மண்கும்பான் நன்னீர் கிணறுகளிலும் நீர்குறைந்து வருகின்றன. நீருக்காக தவிக்கும் மக்களுக்கு பிரதேச செயலகம் (வேலணை) பௌசர் மூலம் நீரை வழங்கிவந்த பொழுதும் தற்போது உழவியந்திரங்களில் மேற்கொள்ளும் சேவை போதியதாக இல்லை.

கடற்படையினரும் தமக்கான குடிநீரில் சிறிய ஒரு பகுதியை அவர்களால் வைக்கப்பட்டுள்ள பைபர் ரரங்கில் அம்மன் கோவில் மேற்கு வீதியில் தினம் ஒரு முறை வழங்கி வருகின்ற போதும் நீருக்கு தட்டுப்பாடு நிலவுவதாக இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (23)

## நிர்வாகத் தெரிவுக் கூட்டம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்கான இளைஞர் கழக நிர்வாகத் தெரிவுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வள்ளிபுனம் இனியவாழ்வு இல்லத்தில் இளைஞர் கழக பிரதேச சம்மேளன தலைவர் மு.வருண்ஜீவ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் புதுக்குடியிருப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள 25 இளைஞர் கழகங்களினதும் தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளர், உபதலைவர், உபசெயலாளர் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி க.சிந்துஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




# சிறிதரன் எம்பிக்கு வந்த மயக்கம் - 01

சிறிதரன் எம்பிக்கு இருந்தாற்போல பெரிய பெரிய ஆசைகள் எல்லாம் வந்திருக்கு.

**இந்த ஆசைகள் பலவிதம். அதில் சில -**

1. தமிழரசுக் கட்சியில் தானே சம்பந்தனுக்கு அடுத்த தலைவன். சம்பந்தன் இருந்தாற்கூட அவரைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் வல்லமையும் தன்னிடமே உண்டென்று எல்லா இடத்திலயும் சொல்லி வருகிறார்.

2. இதற்காக அவர் தமிழரசுக் கட்சியில் உள்ள முக்கிய தலைவர்களான சம்பந்தன். மாவை சேனாதிராஜா, விக்கினேஸ்வரன், சி.வி.கே.சிவஞானம் போன்றோரைத் தன்னுடைய கைக்குள் போட்டிருக்கிறார். இவர்களின் தோளில் ஏறித்தான் கட்சியின் தலைமைப்பீடத்தைப் பிடிக்க முடியும் என்று ஒரு நாள் இரவு தன்னுடைய நெருங்கிய சகாக்களிடம் தன்னுடைய உள்ளக்கிடக்கையைச் சொல்லியிருக்கிறார். ஆகவே. தலைமைக்குக் குறிவைத்திருக்கிறது இந்தப் போலிப்புலி.

3. தற்போதுள்ள புதிய ஆட்சிச் சூழலில் மெல்ல மெல்ல கிளிநொச்சி மாவட்டத்தில் தன்னுடைய அரசியல் அதிகாரத்தை பிரயோகிக்க முயற்சிக்கிறார் சிங்கன். இதற்காக அவர் பிரதேச செயலர்களை மையமாக வைத்துக் கொண்டு காய்களை நகர்த்தப் பார்க்கிறார். இதன் முதற்கட்டமாகவே காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வு என்ற பிரச்சினையைக் கையில் எடுத்திருக்கிறார்.


இது ஏற்கனவே சந்திரகுமார் எம்பி கையில் எடுத்துத் தீர்வு காண முற்பட்ட விசயம். இப்பொழுது சிறிதரன் இதைக் கையில் எடுத்து திரும்பத் தான் ஏதோ செய்வதாகக் காட்டுவதற்காக 'அரைத்த மாவை அரைக்கிறார்'.

இந்த விசயம் என்னவென்றால், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பரந்தன், புன்னைநீராவி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மத்திய வகுப்புத்திட்டக் காணிகளில் 1249 குடும்பங்கள் குடியிருக்கின்றன. இதைப்போலக் கரைச்சிப் பிரதேசத்திலும் 100 வரையான குடும்பங்கள் இப்படியான நிலையில் உள்ளன.

இவர்களுக்கான காணி உரிமப்பத்திரம் வழங்கப்படவில்லை. காணி உரிமப்பத்திரம் இல்லாத காரணத்தினால் இவர்களுக்கான வீட்டுத் திட்டம் கிடைக்கவில்லை. அத்துடன் மலசல கூடம், பிற உதவிகள் என எதையும் வழங்க முடியாத நிலை உள்ளது. இதனால். இந்த மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளனர். இந்த மக்களின் நிலையைக் கருத்திற் கொண்டு, இந்தக் காணிப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை பிரதேச செயலகம், மாகாண காணி ஆணையாளர். மத்திய அரசின் காணி ஆணையாளர் நாயகம் (கொழும்பு), முந்திய காணி அமைச்சர் ஆகிய தரப்புகளுடன் பேசி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தவர் சந்திரகுமார் எம்பி.

ஆனால், இந்தக் காணிகளை மத்திய வகுப்புத்திட்டத்தில் முன்னர் வழங்கப்பட்டவர்களுக்கே கொடுக்க வேண்டும் என்று சொல்லி வருகி றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இதற்கான சட்டமூலம் ஒன்றை கடந்த ஆட்சியின்போது நீதி அமைச்சராக இருந்த ரவூப் ஹக்கீமுடன் இணைந்து பாராளுமன்றத்தில் கொண்டு வர முனைந்தனர் தமிழ்க்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் அந்தக் கட்சியின் முக்கியஸ்தர் சுமந்திரனும்.

ஆகவே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தடையாக இருப்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான். ஆனால், அதைத் தந்திரமாக மறைக்க முயற்சிக்கிறார் சிறிதரன். இதற்காக அவர் ஐந்து மாதங்களுக்கு முன்பு உழவனூரில் ஒரு கூட்டத்தைக் கூட்டி உண்மைக்குப் புறம்பாகக் கதைத்தார்.




இப்பொழுது புதிய ஆட்சியைத் தனக்குச் சாதகமாக் பயன்படுத்திக் கொண்டு, பிரதேச செயலர் மூலமாக இன்னொரு கூட்டத்தைக் கூட்டி இந்த மக்களை ஏமாற்றும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். இந்தக் கூட்டத்தில் சிறிதரன் சொன்ன கதைகளைக் கேட்டு அங்கே இருந்த கிராம அலுவலர்கள் தொடக்கம் பல அதிகாரிகளும் சிரி சிரியென்று சிரித்தார்கள்.

மத்திய வகுப்புத்திட்டக் காணிப் பிரச்சினையைப் பற்றிக் கதைப்பதற்குப் பதிலாக சிறிதரன், 'பிம்சவிய என்ற 'மண்ணின் மகிமைத்திட்டம்' பற்றிக் கதைத்தார். அதாவது ஆட்சியுரிமைச் சட்டத்தையும் மண்ணின் மகிமைத்திட்டத்தையும் போட்டுக் குழப்பினார்.

இதில் அவர் இரண்டு மாங்காய்களை பறிக்கப் பார்த்தார். பிரதேச செயலகத்திலும் பிரதேச மக்களிடமும் தன்னுடைய அதிகாரத்தைக் காட்டுவது. மற்றது காணிப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கதைப்பதாகப் பாவ்லா பண்ணுவது...

இதைத்தான் அரசியலில் பொய் சொல்லவேணும். அதைப்பற்றி, தம்பி சிறி தரன் எம்.பியிடம் கேளுங்கள் என்றாரோ முதலமைச்சர் விக்கினேஸ்வரன்.

சிரிக்கத் தெரியாதவனும், சிந்திக்கத் தெரியாதவனும் வாழ்வில் சிறப்புப் பெறுவதே இல்லை. - புல்லர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## என்னாங்க இங்கே நடக்குது?

**“மைத்திரி ஆட்சி தொடர்ந்தால் தமிழர் பிரச்சினை தீரும்.” – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நம்பிக்கை.**

**“இன்னும் 20 வருடங்களாவது இந்த ஆட்சி நீடிக்க வேண்டும்.” – சந்திரிகா குமாரதுங்க விருப்பம்.**

**“தீர்வுக்கு கால எல்லையை நிர்ணயிக்க முடியாது.” – யாழ்ப்பாணத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.**

இவை நேற்றைய பத்திரிகைகளின் முன்பக்கத்தில் வந்த மூன்று தலைப்புச் செய்திகள்.

தீர்வு வந்தாலென்ன வராவிட்டாலென்ன, சிங்கள அரசு தடுமாறுகிறதா அது போதும் என்று செயற்பட்டுவரும் ஊடகங்களுக்கும் தலைவர்களுக்கும் இவை வெறும் செய்திகளாக.... மேலும் சரியாகச் சொன்னால், தீர்வை வைக்காத சிங்கள அரசைக் கண்டித்தே இன்னும் நாலைந்து தேர்தல்களை ஓட்டிவிடுவதற்கு அவகாசம் எடுத்த புளுகமாகவும் இருந்திருக்கும்.

ஆனால், தீர்வு வந்துவிடப் போகிறது, நமது பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போகிறது என்று நாளெண்ணிக் காத்திருக்கும் சனங்களுக்கு நிச்சயம் அதிர்ச்சியாகத்தான் இருக்கும்.

வேறென்ன? மைத்திரி அரசு வந்தால் 2015–ல் தீர்வு நிச்சயம் என்று இதோ மூன்று மாதங்களுக்கு முன் முழங்கியவர், இப்போது “மைத்திரி ஆட்சி தொடர்ந்தால்....” என்று ஒரு ‘இக்கு’ வைத்து, அடுத்த தேர்தலுக்கும் தமிழ் மக்களைத் தயார்ப்படுத்துகிறார்.

மைத்திரி ஆட்சி தொடர்ந்தால் தமிழர் பிரச்சினை தீரும் என்றுரைக்கும் தலைவர், எத்தனை ஆண்டுகளுக்குத் தொடர வேண்டும் என்ற மேலதிக விவரமெல்லாம் தேசியப்பித்து முட்டாள்களுக்குத் தேவையில்லை என்று விட்டுவிடுகிறார்.

தீர்வு வரும் வரை மைத்திரி ஆட்சி தொடர வேண்டுமா அல்லது மைத்திரி ஆட்சி தொடர்ந்துகொண்டே இருந்தால்தான் தீர்வு வரலாம் என்று நம்பிக் காத்துக்கொண்டிருக்க முடியுமா இல்லையேல் மைத்திரி ஆட்சி தொடர முடியாமல் போய்விட்டால் தமிழர்க்குத் தீர்வு வரவே வராது என்கிறாரா....

மகிந்தவைத் துரத்தி விட்டால் 2015–ல் தீர்வு வந்துவிடும் என்ற தலைவரின் தேர்தலுக்கு முந்திய அந்த அழுத்தமான கருத்தின் நிலைமை இப்போது என்ன? அந்தக் கருத்தை மாற்றிக் கொள்ள நேர்ந்து விட்டதா? இனி, மைத்திரி ஆட்சி 2015க்குப் பிறகும் தொடருமாக இருந்தால்தான் தீர்வுக்கதையை நாம் எடுக்க வேண்டுமா?

தலைவர்களின் முத்துக் கருத்துக்களுக்கு ஏன் தமிழர்கள் யாரும் சந்தேகமோ விளக்க கேள்விகளோ கேட்பதில்லை என்பது வேறு தொடர்ந்தும் புதிராகவே இருக்கிறது!

பக்கத்திலேயே சந்திரிகா அம்மையார் சொல்கிறார், இந்த ஆட்சி இன்னும் 20 வருடங்களாவது நீடிக்க வேண்டுமாம்! அது வரைக்குமா தீர்வுக்கு காத்திருக்க வேண்டியிருக்கும்? அதுபற்றி நம் தமிழரசுத் தலைவர் என்ன சொல்கிறார்?

இன்னொரு பக்கம், தீர்வுக்கு கால எல்லையை நிர்ணயிக்க முடியாது என்கிறார் ரணில். அடக் கோதாரியே... எல்லையற்ற காலம் வரை நீடித்துச் செல்லத்தான் எல்லாருமாய்ப் ‘பிளான்’ போட்டிருக்கிறீர்களா?

“சிங்கள அரசே தீர்வை வை...” என்று சொல்லிக் கொண்டேயிருப்பவர்கள் ஒருபக்கமும், “ராணுவத்தைத் துரத்திவிட்டு நாட்டைப் பிரித்தெடுக்கக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்...” என்று அவர்கள் மற்றப்பக்கமும் சொல்லியபடி எல்லையற்ற காலம் வரை தேர்தல்களில் வென்று கொண்டேயிருப்பதற்கான ஏற்பாடா இது?

என்னங்க இங்கே நடந்துகொண்டிருக்கிறது? - *ஆசிரியர்*

# கல்வியில் முன்னேற்றம் இல்லையெனில்
# வடக்கு அதிபர்களுக்கு இடமாற்றம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களை விசேட மாவட்டங்களாகக் கருதி அப்பகுதி மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு நடவடிக்கை எடுக்க கூட்டு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

யாழ். கச்சேரியில் இடம்பெறும் வட மாகாண அதிபர்களுடனான சந்திப்பின்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

மீள்குடியேற்ற அமைச்சு மற்றும் கல்வி அமைச்சுடன் இணைந்து இந்தக் கூட்டு அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்குமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்திலே கல்வி நடவடிக்கைகளில் வீழ்ச்சி காணப்படுவதாகவும் கொழும்பு மாவட்டத்தோடு ஒப்பிடும் போது ஒரு போட்டித்தன்மை அற்றுக்காணப்படுவதாகவும் பிரதமர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் கல்வி நடவடிக்கைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி, பாடசாலைகளுக்கு தேவையான வளங்களை அதிகரிக்கச் செய்து, கல்வியின் தரத்தை முன்னேற்ற நடவடிக்ககைகளை மேற்கொள்ளவேண்டும் எனப் பிரதமர் சகல தரப்பினரிடமும் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

வட மாகாணக் கல்வி நடவடிக்கைகளை ஆறு மாத காலத்திற்குள் முன்னேற்றாவிட்டால் அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இங்கு தெரிவித்துள்ளார்.

### நுகர்வோர் சட்டங்களை மீறும்
# வர்த்தகர்கள் தொடர்பாக தகவல் தந்தால் பணப்பரிசு

பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் சட்டங்களை மீறும் வர்த்தகர்கள் தொடர்பில் தகவல் வழங்குவோருக்கு பணப்பரிசு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்தியாவசியப்பொருட்களை மறைத்து வைத்தல் மற்றும் நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்களை விற்பனைக்கு வைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் தகவல்களை வழங்க முடியும் என அதிகார சபையின் தலைவர் ரூம் மர்சூக் குறிப்பிட்டுள்ளார்.

தகவல்களை வழங்குவோர் தொடர்பில் - இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கிடைக்கும் தகவலுக்கு அமைய உடன் சுற்றிவளைப்புகள் மேற்கொள்வதற்கான, சுற்றிவளைப்பு பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

011 3 13 44 46 மற்றும் 011 77 55 481 அல்லது 077 10 88 922 ஆகிய இலக்கங்களுக்கு நுகர்வோர் சட்டங்களை மீறும் வர்த்தகர்கள் தொடர்பில் அறிவிக்க முடியும் எனவும் அதிகார சபையின் தலைவர் ரூம் மர்சூக் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வெகுசன உபகரணக் கொள்வனவு; ஊடகவியலாளருக்கு கடன் வசதி

ஊடகவியலாளாகளிற்கு வெகுசன உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக நிவாரணக் கடன் வசதி வழங்குவதற்கு ஊடக அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அங்கீகரிக்கப்படட இலத்திரணியல் மற்றும் அச்சு ஊடக நிறுவ்னங்களில் முழுநேர அல்லது பகுதி நேர அடிப்படையில் சேவையாற்றும் ஊடகவியலாளாகள், முழு நேரப் பணியில் ஈடுபடும் ஊடக தொழிநுட்ப உத்தியோகத்தாகள் மற்றும் சுதந்திர ஊடகவியலாளாகள் 3 வருட சேவையைப் பூர்த்தி செயதிருப்பவாகள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவாகளாவா.

மோட்டார சைக்கிள், கணிணி (Laptop,Desktop, I pad), புகைப்படக்கருவிகள் கொள்வனவு செய்ய தலா 1 இலட்சம் ரூபாவும் தொலைநகல் கருவி (பக்ஸ்), டிஜிட்டல் ஒலிப்பதிவுக் கருவி கொள்வனவு செய்ய தலா 15 ஆயிரம் ரூபாவும் நிவாரணக்கடனாக வ்ழங்கப்படவுள்ளது.

ஊடக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவினால் தகைமையுள்ள விண்ணப்பதாராகள் நோமுகப்பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவா.

விண்ணப்பங்களை ஏப்ரல் 3 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு பணிப்பாளா ( ஊடகம்) ஊடக அமைச்சு, இல. 163, கிருளப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு - 05 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறும்,

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஊடகவியலாளருக்கான ஊடக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான நிவாரணக்கடன் வசதி வழங்கல் 2015 எனக் குறிப்பிட்டு அனுப்புமாறும வெகுசன ஊடக அமைச்சின் செயலாளா கருணாரத்ன பரணவிதாரண கேட்டுக் கொண்டுள்ளா.

# உயர் பாதுகாப்பு வலய நீக்கம்; உடன்படமறுக்கும் வசந்த பண்டார

அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கிவிட்டு அவ்விடத்தினை மக்களுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பில் தமக்கு உடன்பாடு இல்லையென தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் ஊடகப்பேச்சாளரும் பேராசிரியருமான வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண தமிழ் மக்களுக்கு காணி வழங்குவதற்கு எதிரான கருத்துக்களில் இருந்து ஒரு போதும் முரண்பட்டுக் கொள்ளவில்லை. சொந்தக் காணிகளை இழந்த அந்த மக்களுக்கு காணி வழங்க வேண்டிய கடமை ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்திற்கு உள்ளது என்ற கருத்திலும் நாம் உறுதியாகவேயுள்ளோம்.

வடக்கில் பல விவசாய நிலங்கள் உள்ளன. அது தொடர்பாக நாம் எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்கமாட்டோம். அவற்றை மக்களிடம் மீளக்கொடுப்பதனூடாக அம்மக்கள் பயனடைவார்கள், அவர்களது பொருளாதார, தொழில் தேவைக்கான சூழலையும் உருவாக்கிக் கொள்வார்கள்.

இப்படி இருக்க அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்ட இடங்களிலுள்ள காணிகளை மக்களுக்கு வழங்குவதால் நாட்டின் தேசிய பாதுகாப்பு சீர்குலைவது மட்டுமன்றி, மக்களுக்கு பொருத்தமானதொரு வாழ்க்கைச் சூழலை அமைத்துக்கொள்வது கடினமாயிருக்கும் என்றும் தெரிவித்துள்ள பேராசிரியர் பண்டார அமைச்சர், சுவாமிநாதன் சம்பூர் கடற்படை முகாமை நீக்கி பொது மக்களுக்கு அவ்விடங்களை கையளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளதில் தமக்கு உடன்பாடில்லை என்றும் தெரிவித்துள்ளார்.


இப்படியான சூழலில் இவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்கடற்படைத்தளங்களிலோ அல்லது அதியுயர் பாதுகாப்பு வலயத்திலோ மக்களுக்கு சிறந்ததொரு வாழ்க்கைச்சூழலை அமைத்துக் கொடுக்க முடியாது. அத்துடன் அவர்கள் வாழ்வாதாரத்துக்கு தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அந்தச் சூழல் பொருத்தமானதாக அமையாது.

ஆனாலும் இப்போது ரணில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை பிரித்து வழங்கியுள்ள காரணத்தால் அது தொடர்பில் பேசுவதில் பயனில்லை.ஆனால் இதன் பின்விளைவுகளை ரணில் சந்திப்பார் என்பது உறுதி என்றார்.

**வடக்கும் கிழக்கும் இணைந்த தீர்வு இன்றைய நிலையில் உடனடியாகச் சாத்தியமில்லை. எந்தத் தீர்வும் சிங்கள மக்களில் கணிசமானோரின் ஆதரவைப் பெறும் நிலையிலேயே நடைமுறைக்கு வர முடியுமென்பதால் அந்த ஆதரவை வென்றெடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவது வடக்கு–கிழக்கின் இணைவு உட்பட முழுமையான தீர்வுக்கான முன்தேவை. இதில் எவ்வித அக்கறையும் செலுத்தாமல் வடக்கு–கிழக்கு இணைந்த தீர்வு என்று கூறுவது தேர்தலுக்காக மக்களை உணர்ச்சிவசப்படுத்தும் கோஷமாகவே இருக்கும். இது மக்கள் நல அரசியலல்ல. சுயநல அரசியல்.**

# போராட்டங்கள் நடத்தினீங்க என்ன பண்ணிக் கிழிச்சீங்க?

■ சாங்கர சிவன்



பொதுத் தேர்தல் எப்போது நடக்கும் என்பதையிட்டு இன்னும் தெளிவாகத் தெரியாது. தற்போதைய தேர்தல் முறையின் கீழ் நடத்துவதா அல்லது புதிய தேர்தல் முறையின் கீழ் நடத்துவதா என்பதில் ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இழுபறி நிலையில் இருப்பதால் தேர்தல் எப்போது என்று எதிர்வு கூறுவது சாத்தியமில்லை. ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இப்போதே தேர்தலுக்குத் தயாராகின்றது.

தேர்தல் நெருங்கி வருகின்றதென்றால் மக்களின் சில பிரச்சினைகளுக்காவது தீர்வு கண்டு அந்தத் தீர்வைச் சாதனைகளாகக் காட்டி வாக்குக் கேட்பது அரசியல் கட்சிகளின் வழமை. ஆனால், கூட்டமைப்பு இதற்கு விதிவிலக்கு. அவர்கள் சாதனையாகக் கூறுவதற்கு எதுவுமில்லை. அறுபத்தைந்து வருடங்களுக்கு மேற்பட்ட அரசியலில் தமிழ் மக்களின் எந்தப்பிரச்சினைக்கும் தமிழ்த் தலைவர்கள் தீர்வு காணவில்லை. தீர்வை நோக்கிய நகர்வையாவது ஆரம்பிக்கவில்லை. மக்களின் பிரச்சினைகளுக்கு நடைமுறைச் சாத்தியமான வழியில் தீர்வு காணும் திறமை இவர்களுக்கு இல்லையா அல்லது பிரச்சினைகள் தீர்வதை இவர்கள் விரும்பவில்லையா என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

எவ்வாறாயினும் தமிழ்த்தலைவர்களால் ஒரு பிரச்சினைக்கும் தீர்வு காண முடியவில்லை. பிரச்சினைகள் தங்கள் பாட்டுக்கு வளர்ந்து கொண்டிருக்கின்றன. இதே பிரச்சினைகளை அரசியல் மூலதனமாக்கித் தலைவர்களும் வளர்கின்றார்கள். பிரச்சினைகளைப் பட்டியல் போட்டு உணர்ச்சியூட்டும் வகையில் பேசி மக்களுக்கு உசுப்பேற்றுவதன் மூலமும் சர்வதேச சமூகம் இறங்கத் தயாராக இருக்கின்றது என்று போலி நம்பிக்கைகளை மக்களிடம் வளர்ப்பதன் மூலமுமே தேர்தல் காலத்தில் இவர்கள் வாக்குகளை அள்ளுவார்கள். பிரச்சினைகளின் தீர்வுக்கு என்ன செய்தீர்கள் என்றோ ர்வதேச சமூகம் ஏன் இன்னும் வந்து றிறங்கவில்லை என்றோ மக்கள் கேள்வி கேட்பதில்லை. அவர்கள் உணர்ச்சி அரசியலுக்குப் பழக்கப்பட்டுவிட்டார்கள்.

இன்று இணக்க அரசியல் பற்றி மேல் மட்டத் தலைவர்கள் சிலர் பேசுகின்றார்கள். ஜனாதிபதி பிரித்தானியாவுக்குச் செல்லும் போது எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டாம் என்று புலம்பெயர் அமைப்புகளிடம் வேண்டுகோள் விடுக்கும் அளவுக்கு அரச விசுவாசத்தையும் காட்டுகின்றார்கள். சம்பந்தனும் சுமந்திரனும் வடமாகாண முதலமைச்சரும் மாத்திரம் இணக்க அரசியல் பற்றிப் பேசுகின்றார்களேயொழிய மற்றவர்கள் அதைப் பற்றிக் கதைப்பதாகக் காணோம். இவர்கள் இணக்க அரசியல் பேசுகின்ற அதேவேளை, கடுங்கோட்பாட்டு அரசியலும் கூட்டமைப்பு வட்டாரங்களிலிருந்து வெளிவருகின்றது. முதலில் அதைப் பார்ப்போம். இணக்க அரசியலுக்குப் பின்னர் வருவோம்.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த தீர்வே தேவை என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன். இராணுவத்தை வெளியேற்றி இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றாவிட்டால் போராட்டம் வெடிக்கும் என்கிறார் மாவை சேனாதிராசா. இவர்கள் கூறுகின்ற இரண்டு விடயங்களும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. உடனடியாக நடைமுறைச் சாத்தியமானவையா இக்கோரிக்கைகள் என்பதே இங்கு முக்கியமானது. தீர்வுக்கான கோரிக்கைகளை வெற்றியீட்டும் இலக்குடன் முன்வைக்கவேண்டுமேயொழிய உசுப்பேற்றலுக்காக முன்வைக்கக்கூடாது. சமகால யதார்த்தத்தைக் கவனத்தில் கொள்ளாமல் அவை காலம் முழுவதும் கோரிக்கைகளாகவே இருப்பதில்தான் முடியும். பிரச்சினையின் தீர்வு முயற்சிக்குப் பாதிப்பாகவும் அது அமையலாம். நல்ல கோரிக்கையைப் பிழையான நேரத்தில் வலியுறுத்துவது அக்கோரிக்கையைப் பலவீனப்படுத்துவதோடு கோரிக்கையை வென்றெடுப்பதற்குப் புறம்பான வேறொரு நோக்கத்துக்காகவே பயன்படுவதாகவும் அமையும்.

வடக்கும் கிழக்கும் இணைந்த தீர்வு இன்றைய நிலையில் உடனடியாகச் சாத்தியமில்லை. எந்தத் தீர்வும் சிங்கள மக்களில் கணிசமானோரின் ஆதரவைப் பெறும் நிலையிலேயே நடைமுறைக்கு வர முடியுமென்பதால் அந்த ஆதரவை வென்றெடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவது வடக்கு-கிழக்கின் இணைவு உட்பட முழுமையான தீர்வுக்கான முன்தேவை. இதில் எவ்வித அக்கறையும் செலுத்தாமல் வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வு என்று கூறுவது தேர்தலுக்காக மக்களை உணர்ச்சிவசப்படுத்தும் கோஷமாகவே இருக்கும். இது மக்கள் நல அரசியலல்ல. சுயநல அரசியல்.

**மாவையின் போராட்டக் கோஷம் தேர்தலில் வாக்குகளை அள்ளித் தரலாமேயொழிய மக்களுக்கு அதனால் எந்த நன்மையும் இல்லை. இராணுவப் பிரசன்னத்தைப் போராட்டத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டுவர முடியாது. இணக்க அரசியலின் மூலமே இதைச் சாதிக்கலாம்.**

நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்துச் சிங்கள மக்கள் மத்தியில் அதற்கு ஆதரவு தேடும் வழிமுறையை மேற்கொள்வதன் மூலம் தான் இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்க முடியும். இதைச் செய்வதற்குத் தமிழ்த் தலைவர்கள் தயாரில்லையென்றால் பிரச்சினை தீர்வதை அவர்கள் விரும்பவில்லை என்று அர்த்தம். பிரச்சினை தீர்வதை விரும்பாதவர்கள் தான் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதில் கவனம் செலுத்தாமல் சமகால யதார்த்தத்துக்கு முரணான கோரிக்கைகளை முன்வைப்பார்கள்.

ஏதாவதொரு தீர்வு சாத்தியமானதாகத் தோன்றினால் உடனே அதனிலும் பார்க்க மேலான ஒரு தீர்வை வலியுறுத்தி முன்னைய தீர்வை நிராகரிப்பது தமிழ்த் தலைவர்களுக்கு வழக்கமாகிவிட்டது. பிரேமச்சந்திரனும் அதைத்தான் செய்கின்றார். பதின்மூன்றாவது திருத்தம் முழுமையான அதிகாரங்களுடன் நடைமுறைக்கு வரலாம் என்ற நம்பிக்கை அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றது. பதின்மூன்றாவது திருத்தத்தை நிராகரிப்பதற்காக இவர் வடக்கு, கிழக்கு இணைப்புக் கோரிக்கையை முன்வைக்கின்றார். அரசியல் தீர்வு நடைமுறை பதின்மூன்றாவது திருத்தத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

மாவையாரின் போராட்ட அறிவிப்பைப் பார்க்கும்போது சிரிப்புத்தான் வருகிறது. அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்காவிட்டால் ஜனவரி முதலாந்திகதி சாத்வீகப் போராட்டம் வெடிக்கும் என்று கூறினார். ஜனவரி முதலாந்திகதி போயே விட்டது. இராணுவத்தை வெளியேற்றி இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றாவிட்டால் போராட்டம் வெடிக்கும் என்று இப்போது சொல்கிறார். இன்னும் கொஞ்ச நாட்களுக்குப் பின் வேறு என்ன கோரிக்கையை முன்வைப்பாரோ தெரியாது.

போராட்டம் வெடிக்கும் என்று மாவை சேனாதிராசா அடிக்கடி சொல்வதால் அது கச்சேரியடிச் சத்தியாக்கிரகம் போன்ற பெரிய போராட்டமாக இருக்கும் என்று நினைத்துவிடக்கூடாது. அப்படியான ஒரு போராட்டத்தை நடத்தக்கூடிய நிலையில் தமிழரசுக்கட்சி இப்போது இல்லை. மக்களும் அதற்குத் தயாராக இல்லை. இராணுவம் வெளியேற வேண்டும் என்று கூட்டமைப்பு இதுவரையில் பல போராட்டங்களை நடத்தியது. எல்லாம் ஒரு நாள் போராட்டங்கள். கூடுதலான போராட்டங்கள் மாவையின் தலைமையிலேயே நடந்தன. எந்தப் பலனும் இல்லை.


மாவையின் போராட்டக் கோஷம் தேர்தலில் வாக்குகளை அள்ளித் தரலாமேயொழிய மக்களுக்கு அதனால் எந்த நன்மையும் இல்லை. இராணுவப் பிரசன்னத்தைப் போராட்டத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டு வர முடியாது. இணக்க அரசியலின் மூலமே இதைச் சாதிக்கலாம். வளலாயில் ஒரு பகுதியிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட்டு மக்கள் அங்கு குடியமர்த்தப்படுகின்றனர். கூட்டமைப்பு வட்டாரங்கள் வளலாய் மீள்குடியேற்றத்தை விமர்சிக்கின்றனவேயொழிய இணக்க அரசியலின் மூலம் மேலும் பல பகுதிகளை விடுவிப்பதற்கு முயற்சிக்கவில்லை. சிறுபான்மையினரின் பிரச்சினைகளைக் கையாள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையில் ஒரு செயலணி நியமிக்கப்பட்டிருக்கின்றது. போராட்டம் வெடிக்கும் என்பது போன்ற உணர்ச்சிக் கோஷங்களை ஓரத்தில் போட்டுவிட்டு இணக்க அரசியல் மூலம் இச்செயலணிக்கூடாகப் பல காரியங்களை நிறைவேற்றலாம்.

எதையும் இழக்காமல் படிப்படியாக நன்மைகளைப் பெறுவது தான் இணக்க அரசியல். ஒரு புறத்தில் இணக்க அரசியல் பற்றிப் பேசிக்கொண்டு மறுபுறத்தில் நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளை வலியுறுத்துவது மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிமுறையல்ல. டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த காலத்தில் வடக்கில் எத்தனை இராணுவ முகாம்கள் மூடப்பட்டன என்றும் எவ்வளவு காணி இராணுவத்திடமிருந்து பொது மக்களுக்குக் கையளிக்கப்பட்டது என்றும் பக்கச்சார்பின்றிப் பார்த்தால் இணக்க அரசியலின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்ளலாம்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# மேற்குலக, இந்திய உறவால் சீனாவை இழக்கவே முடியாது

## அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், மேற்குலக சக்திகள் மற்றும், இந்தியாவுடனான உறவுகளில் திடீர் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், அதற்காக சீனாவை இலங்கை இழக்காது என்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய அரசாங்கம் பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, செக் குடியரசு போன்ற நாடுகளுடன் உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் உறுதியாக உள்ளது.

இலங்கைக்கு எதிராக ஐ.நா. விசாரணையை வலியுறுத்தி, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்த போது, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா போன்ற நாடுகளே இலங்கைக்கு துணையாக இருந்தன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போதும், இந்த நாடுகள் நிபந்தனையற்ற வகையில் ஆதரவளித்தன.

எவ்வாறாயினும், விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு அமெரிக்காவினது முக்கியமான ஆதரவும் கிடைத்திருந்தது.

சீனா ஒரு உண்மையான நண்பன். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தற்போதைய பீஜிங் பயணம், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உதவும்.

ஜனாதிபதியின் சீனப் பயணத்தின் மூலம், ஒரே நேரத்தில் சீனாவுடனும், மேற்குலகத்துடனும், நெருக்கமான உறவைப் பேண முடியாது என்று சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆனால் புதிய அரசாங்கம் அணிசேரா கொள்கையையே கடைப்பிடிக்கிறது.

நாம் எந்த நாட்டுடனும் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கவில்லை. எல்லோருடனும் நெருங்கிய உறவையே வைத்திருக்கிறோம் என்று தெரிவித்தார்.

# கெஹலியவிடம் விசாரணை

(கொழும்பு)

இலஞ்ச மற்றும் கையூட்டல் ஆணைக்குழுவினால் முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விசாரணை செய்யப்பட்டுள்ளார். இந்த விசாரணை நேற்றுமுன்தினம் சுமார் ஒரு மணித்தியாலமாக இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் எந்தக்குற்றச்சாட்டுக்காக அவர் விசாரணை செய்யப்பட்டார் என்ற விபரம் வெளியாகவில்லை.

இதேவேளை ரம்புக்வெலவும் இந்த விசாரணை தொடர்பில் கருத்து எதனையும் கூற மறுத்துவிட்டார்.

# 351 தேசிய பாடசாலைகளுக்கு 45 கோடி ரூபா நிதி உதவி

நாடு பூரராவும் உள்ள சகல தேசிய பாடசாலைகளுக்கும் 45 கோடி ரூபா நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் நாடு பூராவும் உள்ள 351 தேசிய பாடசாலைகளுக்கும் இவ்வாறு நிதி வழங்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி அமைச்சும் நெஸ்லே நிறுவனமும் இணைந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தும் சிறுவர் மெய வல்லுநர் நிகழ்ச்சி தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

# முன்னாள் கடற்படை, விமானப்படை தளபதிகளுக்கும் பதவி உயர்வு

## ஆதரவு தெரிவிக்கும் அமைச்சர் ஜோன்

(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட மற்றும் முன்னாள் விமானப் படைத் தளபதி ரொசான் குணதிலக்க ஆகியோருக்கு உயர் பதவிகளை வழங்குவது பொருத்தமானது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு போரை முடிவுறுத்திய போது கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படை மற்றும விமானப்படை தளபதிகளுக்கு இராணுவத் தளபதிகளுக்கு வழங்கப்பட்டதனைப் போன்றே உயர் பதவி வழங்கப்படுவது சரியானதே.

முன்னாள் கடற்படைத் தளபதியும், விமானப்படைத் தளபதியும் போரை முடிவுக்குக் கொணடுவரப் பங்களிப்புச செய்துள்ளார்கள் என்பதனை நாம் மறந்து விடக் கூடாது.



இதன்படி, முனனாள் விமானப் படைத் தளபதி ரொசான் குணதிலக்கவிற்கு மாரஸல் ஒப் த எயார் போஸ் மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்ன கொடவிற்கு அட்மிரால் ஒப் த பீல்ட் பதவிகள் வழங்குவது பொருத்தமானது என ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

# இரத்தினபுரி கூட்டத்தில் பங்கேற்றவர்கள் மீது நடவடிக்கை இல்லை



(கொழும்பு)

இரத்தினபுரி கூட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு எதிராக தற்போதைக்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சனா யாப்பா தெரிவித்துள்ளார்.


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குமாறு கோரி இரத்தினபுரியில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்கக் கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும் உத்தரவினை மீறி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

கூட்டத்தில் பங்கேற்கக்கூடாது என சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்திருந்தது. இந்தத் தீர்மானம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானம் ஒன்றை எடுத்தால் அதன் அடிப்படையில் செயற்பட வேண்டியது அனைத்து உறுப்பினர்களினதும் கடமையாகும்.

மத்திய செயற்குழுவின் தீர்மானத்திற்கு விரோதமான முறையில் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் எதிர்காலத்தில் தீர்மானிக்கபபடும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# சந்திரிக்கா, மகிந்த இணைந்து பொதுத்தேர்தலை வெல்ல வேண்டும்

## அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் ஒரே மேடையில் இணைந்து பொதுத் தேர்தலை எதிர்கொண்டு வெற்றி கொள்வதே எமது இலக்காகும் என ஆராய்ச்சி மற்றும் உயர்கல்வி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டி - ஹத்தரலியத்த பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கு சுதந்திரக் கட்சி எதிர்ப்புத் தெரிவிக்காது. இருப்பினும், ஜனாதிபதியின் முக்கிய சில அதிகாரங்களைக் குறைத்து பிரதமருக்கு வழங்குவதற்கு சுதந்திரக் கட்சி எதிர்ப்பைத் தெரிவிக்கும்.

அவ்வாறு செய்தால் நாட்டிலுள்ள சிறுபான்மைக் கட்சிகள் யாவும் பிரதமருக்கு எதிராக விரல் நீட்டக்கூடிய சூழல் உருவாகும். இது போன்ற சம்பவங்கள் முன்னர் ஏற்பட்டிருந்ததை அறிவோம்.

முன்னாள் ஜனாதிபதியான அமரர் டி.பி.விஜேதுங்க காலமான திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து எவரும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படவில்லை.

ஆகவே முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் ஒரே மேடையில் இணைந்து பொதுத் தேர்தலை வெற்றிகொள்வதே எமது இலக்காகும்.

அதேபோன்று அடுத்த பிரதமரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் இணைந்தே தெரிவு செய்வார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினரின் நோக்கம் எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் தங்களில் ஒருவரை பிரதமராக்குவதாகும்.

மேலும் தேர்தல் முறை மாற்றத்தை 19 ஆவது திருத்தச் சட்டமூலத்துடன் சேர்த்து சபையில் சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தோம்.

19 ஆவது திருத்தச் சட்டம் பற்றி கருத்துரைத்த அவர் தேர்தல் முறை திருத்தச் சட்டமூலம் சபையில் சமர்ப்பித்தால் மட்டுமே 19 ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும் என்றும் கூறினார்.

# உள்ளக விசாரணையை எவ்வாறு நடாத்துவது?

## ஆராயும் நிபுணர்கள்

போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து உள்ளக விசாரணையை எவ்வாறு நடாத்துவது என்று நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

எமக்கு வழங்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் உள்ளக பொறிமுறை செயற்பாட்டை முன்னெடுப்போம் என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இது தொடர்பான பொறுப்புக்கூறலானது உள்ளக சட்டத்துக்கு அமைய உள்ளக நீதிபதிகளைக் கொண்டே நிலை நாட்டப்படும்.


அதாவது உள்நாட்டு சட்டத்தின்படியும் எமது நீதிபதிகளைக் கொண்டும் உள்ளக பொறிமுறைக்கு அமைவாகவும் உள்ளக பொறிமுறையை நிறுவ இருக்கின்றோம்.

இந்தச் செயற்பாட்டை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் நிபுணர்கள் தற்போது ஆராய்ந்து வருகின்றனர்.

அந்தவகையில் எமக்கு வழங்கப்பட்டுள்ள காலப் பகுதிக்குள் இந்தச் செயற்பாட்டை முன்னெடுப்போம் என்றார்.

# மைத்திரி அரசின் நிவாரணம் ஊடகத்தில் மட்டுமே விபரிப்பு

## முன்னாள் அமைச்சர் காமினி தெரிவிப்பு



மைத்திரி அரசாங்கத்தின் 100 நாள் வேலைதிட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் மாத்திரமே தெரிவிக்கின்றனவே தவிர, மக்களுக்கு அந்நிவாரணம் கிடைப்பதில்லை என முன்னாள் தொழில் மற்றும் உற்பத்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

சிங்கள வானொலி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தான் மீண்டும் ஒருபொழுதும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய மாட்டேன் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வருவதனையும் இதன் போது அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிராமப் பெண்களின் கல்வியறிவு குறைந்த மட்டத்திலேயே உள்ளது

## நல்லூர் பிரதேச செயலர் செந்தில் நந்தனன் கவலை

(யாழ்.நிருபர்)

கிராமப்புறப் பெண்களின் கல்வி அறிவு குறைவான மட்டத்திலேயே காணப்படுகிறது. காதல், திருமணம் மற்றும் மூட நம்பிக்கைகள் போன்ற சமூகக் காரணிகள் கிராமியப் பெண்களின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. மாதர் சங்கங்கள், மகளிர் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் பெண்கள் தொடர்பான சமூக அமைப்புகள் பெண்களின் கல்வியை வலியுறுத்த வேண்டும்.

இவ்வாறு நல்லூர் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் குறிப்பிட்டார்.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் திருமதி சுபாங்கினி மதியழகன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் செந்தில் நந்தனன் தொடர்ந்து பேசுகையில்,

சமூகத்தில் பல்வேறு நெருக்கடிகளுக்கும் உள்ளாவோர் முதியோர், குழந்தைகள் மற்றும் பெ களாவர். இவர்கள் தொடர் ப மக்களிடையே விழிப்பு ரவை ஏற்படுத்தும் முகமாக சரவதேச முதியோர், குழந்தைகள தினம், சர்வதேச மகளிர் தினம் என்பன கொண்டாடப்படுகின்றன.

ஆண்களுக்குச் சமனாக இன்று பெண்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறியுள்ள போதிலும் சமூகத்தில் ஆண், பெண் சமமின்மை, பெண்ணடிமை நிலை என்பன காணப்படுகின்றன. தொழில் முயற்சிகளில் ஈடுபடும் பெண்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் கூட ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. குறிப்பாக மலையகத்து தோட்டத்துறையில் வேலை செய்யும் பெண்கள் குறைந்த கூலியே பெறுகிறார்கள்.

எமது பிரதேசத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களில் பலர் குடும்பத்தலைவனை இழந்து கஷ்ரப்படுகிறார்கள். இவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாக சுயமுயற்சி ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் விதவைகளின் மறுவாழ்வுத்திட்டம் தொடர்பாக கவனம் செலுத்தப்படவேண்டும்.

ஒளிமயமான குடும்பம், நல்ல சமூகம் அமைய வேண்டுமானால அனைத்துப் பெண்களும் நல்ல கல்வி அறிவு பெற்றிருக்க வேண்டும். கல்வி அறிவுள்ள பெண்களால் தான் அப்பழுக்கற்ற சேவை செய்ய முடியும் பெண்களுக்கு கல்வி வழங்குவதிலும், பெண்கள் கல்வியை இடைநிறுத்தாது உயர்கல்வியைத் தொடர்வதிலும் பெண்கள் தொடர்பான அமைப்புகள் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று எமது பிரதேச செயலகத்தில் 60 வீதத்திற்கும் அதிகமான பெண்கள் கடமையாற்றுகிறார்கள்.

அவர்கள் இப்பிரதேச அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறார்கள். மகளிர் விவகார பிரதியமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் எமது பிரதேசத்து பெண்களின் அபிவிருத்திக்கான பல்வேறு திட்டங்களையும் முன்னெடுத்து செயற்படுத்தி வருகிறார் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் இந்நிகழ்வில் பாடசாலை மாணவிகள் பங்கு கொண்ட பட்டிமன்றம், நடன நிகழ்வுகள் மற்றும் மாதர் சங்க உறுப்பினர்களின் வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (10)

# தென்மராட்சியில் நடமாடும் சேவை



(தென்மராட்சி)

புனர்வாழ்வு அதிகார சபையின் தென்மராட்சிப் பகுதிக்கான நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சிவன்கோவிலடியில் அமைந்துள்ள கலாசாரமண்டபத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்றபோது சபையின் தலைவர் என்.பத்மநாதன் பணிப்பாளர் வீரரட்ண ஜீவந்த, எஸ்.எம்.பதியுதீன் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நடமாடும் சேவையில் கடந்த காலத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் தமது சொத்துக்களை இழந்து பாதிப்படைந்தவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. (11)

# திருட்டில் ஈடுபட்ட சிறுவன் நன்நடத்தை பாடசாலையில்

(யாழ்ப்பாணம்)

திருட்டு குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிறுவனை, சிறுவர் நன்நடத்தை பாடசாலையில ஒப்படைப்பதுடன் குற்றம் சுமத்தப்பட்ட சிறுவனுக்காக ஊர் மக்களுடன் மோதிய உறவினர்கள் இருவரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறும் மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் கறுப்பையா ஜீவராணி, கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

புத்தூர் கலைமதி பகுதியிலுள்ள வீடுகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சிறுவனை, அப்பகுதி மக்கள் பிடித்து சிறுவனின் பெற்றோரிடம் ஒப்படைத்து திருட்டில் சிறுவன் ஈடுபடுகின்றான் என்பதை எடுத்துக்கூறினர்.

சிறுவனை அழைத்து வந்தவர்கள் தெரிவிப்பதை செவிமடுக்காத சிறுவனின் உறவினர்கள், சிறுவன் திருடவில்லையெனவும் பொய்க்குற்றச்சாட்டு கூறுவதாக கூறியும், சிறுவனை கூட்டி வந்தவர்களை தாக்கினார்கள்.

தாக்குதலுக்குள்ளானவர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், சிறுவனையும், தாக்கியவர்களையும் பொலிஸார் கைது செய்தனர்.

# வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத்தெரிவு அண்மையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி ந.தசரதராஜகுமாரனின் வழிப்படுத்தலில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னைய நிர்வாகத்தின் காலப்பகுதி நிறைவு பெற்றதால் புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

புதிய தலைவராக நடனசபேசன் லோகராசா, செயலாளராக முருகுப்பிள்ளை குகநேசன், பொருளாளராக கறுப்பையா நவரத்தினம் தெரிவு செய்யப்பட்டனர்.

உப தலைவராக தர்மகுலசிங்கம் ரதிகரன், உப செயலாளராக கிருஸ்ணன் நிர்மலா தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் ஆறு பேரைக் கொண்ட நிர்வீகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

இந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் அலுவலர் க.குணசிங்கம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் அலுவலர் ம.சுஜிதரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் அபிவிருத்தி அலுவலர் ம.சிற்சக்தி, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் அலுவலர் ச.சாருகாசினி, துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் அலுவலர் ரி.ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (90)

# பொங்கல் விழா

(திருநெல்வேலி)

தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் வருடாந்தப் பொங்கல் விழா அடுத்த மாதம் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆண்டு தோறும் வருடத்தின் நிறைவு செவ்வாயில் இவ்வருடாந்தப் பொங்கல் திருவிழா இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (137)

# பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவால் நடாத்தப்படவுள்ள பயிற்சி நெறிகளுக்கு பாடசாலையை விட்டு விலகியோரும் இப்பயிற்சி நெறியை வாழ்வாதார நோக்கில் பயன்படுத்துவோரும் விண்ணப்பிக்கமுடியும்.

எனவே இப்பயிற்சி நெறியை பயில விரும்புவோர் பயிற்சி நிலையம் நடைபெறுகின்ற பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொண்டு உடனடியாக தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான விபரம் வருமாறு,

யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி - கேக்ஐசிங் வடிவமைப்பு, யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை - அடிப்படை எழுத்தறிவூட்டல், யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் சிங்கள மொழித்திறன் விருத்தி, யா/நவாலி மகா வித்தியாலயம் - நவீன ஆடைவடிவமைப்பும் தயாரிப்பும், யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை - தலையலங்காரமும் முக ஒப்பனையும், யா/அராலி சரஸ்வதி வித்தியாலயம் - அலுமினியம் பொருத்துதல், யா/இராமநாதன் மகளிர் கல்லூரி - தலையலங்காரமும் முக ஒப்பனையும். யா/புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தி - வெல்டிங் (மின் ஒட்டுதல்) தொழில்நுட்பம். யா/குளமங்கால் றோ.க.த.க.பாடசாலை - நவீன ஆடைவடிவமைப்பும் தயாரிப்பும், யா/இணுவில் இந்துக் கல்லூரி - தொலைபேசி திருத்துதல் தொழில் நுட்பம், யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் - தலையலங்காரமும முக ஒப்பனையும். யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாலயம் - கணனி பயிற்சி நெறி, இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் - நவீன ஆடைவடிவமைப்பும் தயாரிப்பும்.



நட்சத்திர பெண்கள் மகளிர் விவகாரக் குழு நடாத்திய மகளிர் தின நிகழ்வு நல்லூர் பிரதேசசபையில் நடைபெற்ற போது விருந்தினர்களாக வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அ.ரவீந்திரதாசன், நல்லூர் பிரதேச சபை உதவிச் செயலாளர் திரு மதி சுபாயினி மதியழகன் என பலர் கலந்து கொண்டதனைக் காணலாம்.

# அள்ளி அணைத்துக் கொள்ள சொல்லி அடிப்பது யார்?

## உள்ளூரில் ஆட்டம் காணுமா ஆஸி; கோட்டை விடுமா மக்கலம் படை

(மெல்பேர்ன்)

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா இன்றுடன் (ஞாயிற்றுக்கிழமை) நிறைவடைகிறது. போட்டியை நடாத்தும் நாடுகளான அவுஸ்ரேலியாவும், நியூசிலாந்தும் இறுதிப்போட்டிக்குள் அடியெடுத்து வைத்துள்ளன. கிண்ணம் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் இவ்விரு அணிகள் இடையிலான இறுதியுத்தம் அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில் இன்று (இலங்கை நேரப்படி காலை 9 மணி) நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 8 ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ள பிரண்டன் மக்கலம் தலைமையிலான நியூசிலாந்து முதல் முறையாக மகுடத்தை சுவைக்கும் உத்வேகத்துடன் இன்று களமிறங்கவுள்ளது. வெற்றி பெற்றால் அது நியூசிலாந்து அணியின் 300ஆவது ஒரு நாள் போட்டி வெற்றியாகவும் அமையும். அதே சமயம் 5ஆவது பட்டத்திற்கு குறி வைத்துள்ள மைக்கல் கிளார்க் தலைமையிலான அவுஸ்ரேலியாவும் எதிரணியை மடக்குவதற்கான வியூகங்களை தீட்டியுள்ளது.

இந்த உலக கோப்பையை பொறுத்தமட்டில் நியூசிலாந்து அணி லீக் முதல் அரையிறுதி வரையிலான தனது அனைத்து ஆட்டங்களையும் சொந்த நாட்டிலேயே விளையாடியிருக்கிறது. இப்போது தான் முதல் முறையாக அவுஸ்ரேலிய மண்ணில் விளையாடப் போகிறது. இது தங்களுக்கு சாதகமாக இருக்கும் என்று அவுஸ்ரேலியா கருதுகிறது.

உலக கோப்பை போட்டிகளில் இவ்விரு அணிகளும் இதுவரை 9 ஆட்டங்களில் மோதி ஆறில் அவுஸ்ரேலியாவும், 3இல் நியூசிலாந்தும் வெற்றி பெற்றிருக்கின்றன.

நடப்பு உலக கிண்ணத் தொடரில் இவ்விரு அணிகளும் ஒரே பிரிவில் (ஏ பிரிவு) இடம் பெற்றிருந்ததால் லீக்கில் சந்திக்க நேர்ந்தது. ஒக்லாந்து ஈடன்பார்க்கில் நடந்த இந்த ஆட்டத்தில் நியூசிலாந்து அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

லீக்கில் நியூசிலாந்துடன் அடைந்த தோல்வி தான் தங்களை விழித்தெழ வைத்ததாக ஆஸி. கப்டன் மைக்கல் கிளார்க் கூறியிருக்கிறார். இது இறுதிப் போட்டியில் எந்த அளவுக்கு எதிரொலிக்கும் என்பது இன்று மாலை தெரிந்துவிடும்.












# இறுதிப் பரீட்சையில் யாருக்கு கிண்ணம்?

ஜோசப் கிருஷ்ணா

ICC CRICKET WORLD CUP 2015





உலகக் கிண்ண இறுதிப் போட்டி வந்துவிட்டது. ஒரே பிராந்தியத்தின் இரண்டு நாடுகள், அத்தோடு சுற்றுப்போட்டியை இணைந்து நடாத்தும் நாடுகள் இறுதிப் போட்டியில் ஒன்றை ஒன்று எதிர்கொள்ளவுள்ளன. இருந்தும் 28 வருடங்களாக ஏதோவொரு ஆசிய நாடு இறுதிப் போட்டிக்குத் தெரிவான சாதனை இம்முறை இல்லாமற்போனது ஆசிய கிரிக்கெட் இரசிகர்களுக்கு ஆதங்கத்துடன் இணைந்த ஏமாற்றம் தான்.

முன்னதாக வெற்றிக் கிண்ணம் வெல்லும் வாய்ப்பிருந்ததாகக் கருதப்பட்ட தென்னாபிரிக்க அணியை நியூசிலாந்து அபாரமாகப் பின்தள்ளி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இன்னொரு அரையிறுதிப் போட்டியில் திடீரென்று உலகக் கிண்ணப் போட்டிகளின்போது விஸ்வரூபம் எடுத்த இந்திய அணியை அவுஸ்ரேலியா புரட்டிப்போட்டது. எல்லாம் முடிந்துவிட்டது. அந்த ஒரேயொரு ஆட்டத்துக்காக இரசிகர்கள் இனித் தயாராக வேண்டியதுதான்.

உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட 1975ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பதினோராவது சுற்றுப் போட்டி வரை தவறாது கலந்து கொண்ட அணிகளில் ஆஸி.யும், நியூசிலாந்தும் முக்கியமானவை. அவுஸ்ரேலியா இந்தச் சுற்றுப் போட்டி வரலாற்றில் நடப்புத் தொடர் உட்பட ஏழு முறை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. முன்னதாக நான்கு முறை கிண்ணம் வென்றுள்ளது. மறுபுறம் நியூசிலாந்து இதுவரை ஆறு அரையிறுதிப் போட்டிகளுக்கு முன்னேறியுள்ளது. ஆனால், இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது இதுவே முதற் தடவை.

இனி என்ன நடைபெறப்போகிறது. ஒப்பீட்டு அளவில் பேசும்போது அவுஸ்ரேலியா கிண்ணத்தை வென்றெடுக்கும் என்ற மனவோட்டம் சாதாரணமாகக் காணப்படக்கூடும். ஆனால், சாதனை அணியாகத் திகழும் நியூசிலாந்து இது வரையில் ஒரு ஆட்டத்திலும் தோல்வி காணாமற் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று சாதித்துள்ளது. அதேவேளை, முதல் சுற்றுப் போட்டியொன்றில் நியூசிலாந்திடம் அவுஸ்ரேலியா தோல்வி கண்டிருந்தது. இந்தப் பின்னணியிலேயே இரண்டு அணிகளும் இறுதிப் போட்டியில் சந்திக்கின்றன.

இரண்டு அணிகளிலும் ஆபத்தான வீரர்கள் இருந்தாலும், இரண்டு பேர் மிக ஆபத்தானவர்கள். ஒருவர் நியூசிலாந்து அணிக் கப்டன் பிரெண்டன் மக்கலம். மற்றவர் அவுஸ்ரேலிய வீரர் கிளென் மைக்ஸ்வெல். முன்னவர் ஆரம்பத்திலேயே பலம் கொடுப்பவர். நடப்புத் தொடரில் அதிகமான போட்டிகளில் நியூசிலாந்து அணிக்கு சிறந்த அடித்தளத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றார். மைக்ஸ்வெல் எதிர்பார்த்த எண்ணிக்கைக்கு அப்பால் ஸ்கோரைக் கொண்டு போகக் கூடியவர். இதுபோல அவுஸ்ரேலியாவின் ஸ்ரீபன் ஸ்மித். அவர் தன்னை நிரூபித்துள்ளார். மறுபக்கம் குப்ரில் போன்றவர்கள் உயர் திறனுடன் விளங்கும் அதேவேளை, றொஸ் ரெய்லர், எலைற், வில்லியம்ஸன் போன்றோரின் திறன் வெளிப்பாடு அவுஸ்ரேலியாவிற்கு அச்சமூட்டுவதாக அமையும்.

பந்து வீச்சைப் பொறுத்த வரை ஹேசல்வூட், இளம் ராட்சசன் மிட்சல் ஸ்ரார்க், அனுபவ மிட்சல் ஜோன்சன் என்று அவுஸ்ரேலிய வரிசை பின்னி எடுக்கிறது. இதற்கிணையாகவே உலகக் கிண்ணப் போட்டிகளுக்கென்றே விஸ்வரூபம் எடுத்துள்ள ரிம் சௌத்தி, டிரெண்ட் போல்ட் இருவரும் அவுஸ்லேிய பிரபல்ய பெயர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பார்கள் என்று நம்பலாம். எனவே, சமபலத்துடனான இரண்டு அணிகள் மோதுகின்றன என்று சொல்வதே பாதுகாப்பான எதிர்வு கூறலாக இருக்கும்போலத் தெரிகின்றது. அவுஸ்ரேலியாவிற்கு தனது சொந்த மைதானம், அதிகூடிய இரசிகர்கள் ஆதரவு என்பது மேலதிக வாய்ப்பாக இருக்கலாமே ஒழிய, நியூசிலாந்து எதுவும் இல்லாமலே சாதிக்கக்கூடிய அணி என்பதை மறந்துவிடக்கூடாது. உண்மையில் அதி உயர்தரமான, தவறுகள் மிகக்குறைவான, களத்தடுப்பு, சந்தர்ப்பத்திற்கேற்ற விவேகமான தலைமைச் செயற்பாடுகள், சரியான நுணுக்கங்களை (பந்து வீச்சாளர்கள்)ப் பின்பற்றல் என்பனவே இறுதியில் இந்த மகத்தான கிண்ணம் யாருடைய கையில் போய் அமரப்போகிறது என்பதைத் தீர்மானிக்கப்போகிறது என்று முடிவு சொல்வதில் தவறேதும் இல்லை. கடந்து வந்த பதினோராவது உலகக் கிண்ணப் பாதையில் இரண்டு அணிகளுமே இந்தப் பாடங்களை நன்கு கற்றிருப்பார்கள். எனவே, இறுதிப் பரீட்சையில் கற்றவை அவ்வளவையும் சரியாக வெளிப்படுத்துபவர்கள் வெல்வார்கள். அவர்கள் யாரென்று இன்று தெரிந்துவிடும்.



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியை வீழ்த்தி அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணி கடந்த ஆண்டு மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் முதலிடத்தைப் பிடித்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டும் மாகாண மட்டப் போட்டியில் முதலிடம் பிடித்து தேசிய மட்டப் போட்டியிலும் அசத்தும் என அவ்வணி ஆதரவாளர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

# விளையாட்டுச் செய்திகள்

## கரப்பந்தில் செபஸ்ரியன் சம்பியன்

(மருதங்கேணி)

மருதங்கேணி பிரதேச மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிலைக்கேணி செபஸ்ரியன் அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.


மருதங்கேணி பிரதேச மட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் மருதங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரீயன் அணியும் அம்பன் சிங்கொங் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய செபஸ்ரியன் அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நடாத்தப்பட்டன. இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் அம்பன் சிங்கொங் அணியும் மணற்காடு அணியும் மோதின. இதில் அம்பன் சிங்கொங் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் செம்பியன்பற்று அணியும் சென். மேரிஸ் அணியும் மோதின. இதில் செம்பியன்பற்று அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## தொண்டைமானாற்றில் நீச்சல் வீரருக்கு சிலை



(தொண்டைமானாறு)

கடந்த 1954ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் வல்வெட்டித்துறை கரையிலிருந்து தமிழகத்தின் கோடியாக்கரை கரையை ஒரு வழியாக நீந்திக்கடந்து சாதனை படைத்த, தொண்டைமானாற்றை சேர்ந்த அமரர் முருகுப்பிள்ளை நவரத்னசாமியின் உருவச்சிலை கடந்த புதன்கிழமை தொண்டைமானாற்றில் திறந்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ.ஜெயசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிலையினை முற்பகல் 10 மணியளவில் திறந்துவைத்தார்.

விழாவில் நீச்சல்வீரர் நவரத்னசாமியின் புதல்வர்களில் ஒருவரான முன்னாள் வங்கி முகாமையாளர் ராமச்சந்திரன், உறவினர்கள், ஊர்ப் பொதுமக்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த சிலை தொண்டைமானாற்று சந்தியையொட்டி, புதிய பாலத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது. உறவினர்கள் , பொதுமக்கள் மற்றும் நலன்விரும்பிகளின் அரிய முயற்சியினால், சிலைக்கான அடிக்கல் கடந்த தைப்பூச தினத்தன்று இடப்பட்டிருந்தது.

சிலையினை இந்தியாவின் தஞ்சாவூர் மாவட்டம் வேளாங்கன்னி என்ற இடத்தைச் சேர்ந்த கபடி விஜியன் மற்றும் அவரது குழுவினர் வடிவமைத்துள்ளனர்.

## சதுரங்கத்தில் பல்கலை வீரர் முதலிடம்

(யாழ்ப்பாணம்)



மேஜர் சதுரங்க சுற்றுப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக வீரர் நிர்மலராஜா முதலாமிடத்தைப் பிடித்துக் கொண்டதுடன் தேசிய மட்ட பி பிரிவுக்கான போட்டியில் பங்குகொள்ளும் வாய்ப்பையும் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

மேஜர் சதுரங்க சுற்றுப் போட்டி கடந்த 5ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீட முதலாம் வருட மாணவன் எஸ். நிர்மலராஜா முதலாமிடத்தைப் பிடித்துக் கொண்டதுடன் தேசிய மட்ட பி பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் பங்குகொள்ளும் வாய்ப்பையும் பெற்றுக் கொண்டுள்ளார். தேசிய மட்டத்திலும் வெற்றியீட்டி யாழ். மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என சதுரங்க இரசிகர்கள் இவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

## இறுதிப் போட்டியின் கள நடுவராக தர்மசேன

இன்று நடைபெறவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கான நடுவர்களில் ஒருவராக இலங்கையின் குமார் தர்மசேன செயற்படவுள்ளார்.

இப்போட்டியில் ரிச்சர்ட் கெட்டில்பரோ மற்றுமொரு நடுவராக செயற்படவுள்ளாரென சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இப்போட்டியில் இலங்கையின் ரஞ்சன் மடுகல்ல மத்தியஸ்தராக செயற்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இறுதிப்போட்டியின் நடுவர்கள் விபரம்

குமார் தர்மசேன (இலங்கை) மற்றும் ரிச்சர்ட் கெட்டில்பரோ



ரஞ்சன் மடுகல்ல - மத்தியஸ்தர் (இலங்கை), மரைஸ் எரஸ்மஸ் - மூன்றாவது நடுவர் - இயன் கோல்ட் - நான்காவது நடுவர்.

## வலைப்பந்து, எல்லேயில் இளஞ்சுடர், கலையொளி சம்பியன்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச மட்ட வலைப்பந்து மற்றும் எல்லே போட்டிகளில் இளஞ்சுடர், தெல்லிப்பளை கலையொளி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரில் பல அணிகள் பங்குகொண்டபோதிலும் இறுதிப் போட்டியில் இளவாலை இளஞ்சுடர் அணியும் இளவாலை சிவானந்தா அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இளஞ்சுடர் அணி 8-6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆண்களுக்கான எல்லே போட்டியின் இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பளை கலையொளி அணியும் இளவாலை சிவானந்தா அணியும் மோதின. இதில் கலையொளி அணி 1-0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)

## இன்றைய ஆட்டம்

(உடுவில்)

நல்லூர் கந்தர்மடம் ஜனசக்தி சனசமூக நிலையம் யாழ். மாவட்ட தாச்சி சங்க அனுசரணையுடன் மாவட்ட அணிகளுக்கிடையில் நடாத்தி வரும் மாபெரும் தாச்சிப் போட்டியின் அரையிறுதி ஆட்டமொன்று இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடாத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில் இன்றைய தினம் நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் புதுமடம் வைகறை அணியும் மயிலிட்டி கண்ணகி அணியும் மோதவுள்ளன.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

# ஜனாதிபதித் தேர்தலும் சில பிரதிபலிப்புக்களும்!

— ஆனந்ததேவன் -

"ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா ஆசை என்னும் தொட்டிலிலே ஆடாதாரே கண்ணா நீ நடத்தும் நாடகத்தில் நானும் உண்டு - என் நிழலிற்கூட அனுபவத்தில் சோகம் உண்டு பகைவர்களை நானும் வெல்வேன் அறிவினாலே - ஆனால் நண்பரிடம் தோற்றுவிட்டேன் பாசத்தாலே."

ஒருவேளை மகிந்த ராஜபக்ஷ தமிழராய்ப் பிறந்து, தமிழ்ச்சினிமாவின் ரசிகராகவிருந்து, சாய்மனைக் கதிரையில் அமர்ந்தபடி ஒரு கணம் தோல்வியை எடைபோட்டிருப்பாராயின் இந்தப் பாடலைத் தவிர்த்து வேறெந்தப் பாடலைத்தான் பாடியிருப்பார்?

சிலவேளை "நாலுபேரு நடுவிலே நூலு ஒருத்தன் கையிலே" என்றும் பாடியிருப்பாரோ? யாருக்குத் தெரியும்?.

எது எவ்வாறிருப்பினும் ராஜபக்ஷவின் தோல்விக்கு கட்சி உடைக்கப்பட்டமையும், அணியில் அங்கம் வகித்த கட்சிகள் பிரிந்து சென்றமையும், அவரது உள்நாட்டு அரசியல் அணுகு முறையுமே காரணங்களாகும். சிறுபான்மை இனங்களின் மதவுரிமைகளைப் பாது காக்காமையும் (பள்ளிவாசல்கள், தேவாலயங்களைத் தாக்கியவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்தாமை) இந்தியா மற்றும் வெளிநாடுகளுக்குச் சார்பாக ஜால்ரா போடாமையும், அல்லது அவர்களின் தாளத்திற்கு ஆட்டம் பிசகியமையும் காரணங்களாகக் கூறலாம்.

பலம் வாய்ந்த வெளிநாடுகள் உலகின் எந்த திட்டுக்களிலும், மூலை முடுக்குகளிலும் உள்ள சிறிய, பெரிய நாடுகள் தமக்குச் சார்பாக வரும்வரை, தமக்குச் சார்பான பொம்மையரசுகளை உருவாக்கும்வரை இமைப்பொழுதும் சோராமல் இருப்பார்களென அரசியல் விமர்சகர்கள் கூறுவது இலங்கைக்கும் பொருந்தி விட்டதோ தெரியவில்லை.

இனியும், தமிழ்மக்களின் வாக்குகள் ராஜபக்ஷவிற்குக் கிடைக்கப்போவதில்லை. மேட்டுக்குடித் தமிழ்த்தலைமைகளான கூட்டமைப்பும், புலம்பெயர் முன்னணி அமைப்புக்களும் அதற்கு இடம் கொடுக்க மாட்டா. ராஜபக்ஷவிற்கெதிராக, இராணுவத் தளபதியாகவிருந்த சரத்பொன் சேகாவோ, அல்லது பௌத்தவாத வெறிபிடித்த பொதுபலசேனாவிலிருந்து ஒரு மதகுரு நிறுத்தப்பட்டிருந்தாலும், தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டுமென அவர்களையே தெரிவு செய்வார்கள்.

ஏன் மைத்திரி சிறிசேனகூட யுத்தத்தின் இறுதி இரண்டு வாரங்களுக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவிருந்த சமயத்திலேயே கொத்துக் குண்டுகள் போடப்பட்டதாகவும், இவர் புலிகளின் தாக்குதல் முயற்சிகள் பலவற்றிலிருந்து தப்பிப்பிழைத்தவராகவும் கூறப்படுகிறது. சரத்பொன்சேகா போல.


மனித உயிர்களின் அழிவுகள் பற்றி அக்கறைப் படாத, தனிநபர் பயங்கரவாதத்தையும், சுத்த ராணுவக் கண்ணோட்டத்தையும், சாரமாகக் கொண்டதே புலித்தலைமையின் போராட்டம். சாத்தியமற்ற இலக்கையடைவதற்காக, சதா சாவையே வாழ்வாகக் கொண்ட யுத்தத்தை நடாத்திய புலித்தலைமையைத் தோற்கடித்த ஆளுமை ராஜபக்ஷவையே சாரும். இதன்மூலம் நீண்டகால நோக்கில் இலங்கை என்ற நாட்டை மட்டுமல்லாது இந்தப் பிராந்தியத்திற்கான(ஆசியா) பிரிவினைவாத ஊற்றுமூலத்தை அழித்த ஆளுமை ராஜபக்ஷவிற்கு உரியது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும்படி கூட்டமைப்பு ஒருபோதும் புலித்தலைமையையோ அரசுத் தலைமையையோ வற்புறுத்தவில்லை. யுத்தத்தின் வடுக்கள், வலிகள், அழிவுகள் போன்றவற்றிற்கு, 1995இல் யாழ்ப்பாணத்திலிருந்து மக்களை மந்தைகள் போன்று பலாத்காரமாக அழைத்துவந்து கேடயமாகப் பயன்படுத்திய வரைக்கும் அழிவுக்குத் தாங்களும் காரணமென்று ஒரு போதும் தமிழ்மக்களுக்குச் சொல்லப் போவதில்லை. சுயவிமர்சனம் செய்யப் போவதுமில்லை.

அவர்கள் உள்நாட்டிலுள்ள தமிழ்மக்களின் நலன்களைவிட புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள முன்னணி அமைப்புக்களினதும், வெளிநாட்டரசுகளினதும் நலன்களைப் பிரதிபலித்து தமது நாடாளுமன்ற இருக்கைகளைத் தக்க வைத்துக்கொண்டு வலம் வருவார்கள் என்பதையே வரலாறு எமக்குப் போதிக்கிறது.

அரசியற் தீர்வு கிடைக்கின்றதோ இல்லையோ ராஜபக்ஷவைப் பழிவாங்கி, அவருக்குத் தக்க பாடம் புகட்டிவிட்டோமென தமிழ்மக்களின் பெரும்பான்மைப் பிரிவு கருதுகிறது.

இதேவேளை புலம்பெயர் முன்னணி அமைப்புக்கள் சில, வெளிநாட்டரசுகள் மைத்திரியுடன் கைகோர்த்துவிட்டால் தமது அரசியல் வியாபாரம் பட்டுப்போகுமென்றும், சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளைக் கிடப்பில்ப்போட்டு தம்மைக் கைவிட்டு விடுமென்றும் அஞ்சுகின்றனர். ராஜபக்ஷ தொடர்ந்து பதவியிலிருந்திருந்தால், பெரியதொரு ராஜதந்திரப் போரையே நடாத்தி முடித்திருப்போம் என மார்தட்டுகின்றனர். மெல்லுவதற்கு அவலில்லையே என ஏங்குகின்றனர்.



அவர்களின் வர்க்க நலன்கள், அவர்களின் சொகுசு தேசியவாதம் அவர்களை அவ்வாறு பேச வைக்கிறது என்பதைத்தவிர வேறொன்றுமில்லை.

ராஜபக்ஷ, பாடசாலைகள், மருத்துவமனைகள், வீதிப்போக்குவரத்து போன்ற உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகளைப் பாரியஅளவில் நிறைவேற்றியிருந்தாலும், தனது காலத்திலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை மாற்றியமைக்காது, தனது அதிகாரத்தைத் தொடர்ந்து தக்கவைக்கும் நோக்கில் 18ஆவது திருத்தச் சட்டத்தைத் கொண்டுவந்தமை ஜனநாயக விரோதமே. தனது காலத்திலேயே, 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு இணங்க தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமையும் அவர் சார்ந்த தவறுகளே.

எது எவ்வாறிருந்த போதிலும், அரசியல் விமர்சகர் தயான் ஜெயதிலக கூறியதுபோலவே ராஜபக்ஷவின் தோல்வி ஒரு சுழற்சியின் முடிவே. யுத்தத்திற்கு முந்திய காலத்திற்குக் கூடத் திரும்புவதாகவும் இருக்கலாம். ஆம், இந்த மாற்றம் எண்ணைச் சட்டியிலிருந்து நெருப்பினுள் விழுவதாகக்கூட இருக்கலாம். பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

(நன்றி: வானவில் 51)

# கொண்டு வா! கொன்று வா!! ஆனதன் விளைவு?

பாண்டிய மன்னன், "கொண்டு வா அவனை!" என்று சொன்னதை, அவரது சேவகர்கள் "கொன்று வா" என்று புரிந்துகொண்டதன் விளைவுதான் - கோவலனின் மரணத்துக்குக் காரணம் என்று ஒரு வியாக்கியானம் சொல்லப்படுவதுண்டு.

அப்படிப் பார்த்தால், ஒரு சிறு வார்த்தைப் பிரயோக அல்லது புரிதல் தவறுதான் கோ-வலன் என்ற ஒரு மனிதனின் சாவுக்குக் காரணமாகியிருக்கிறது.

அது பின்னர் பாண்டிய மன்னன், அவர்தம் தேவியின் மரணத்துக்கும், மதுரை மாநகரம் முழுவதும் எரிந்துபடவும் காரணமாக அமைந்துவிட்டது.

பாருங்கள்! கொண்டு-கொன்று என்ற இரு வார்த்தைகளுக்கிடையான ஒரு சிறு வார்த்தைப் பிரயோக-புரிதல் தவறு, ஒரு தேசத்தின் அழிவுக்கே காரணமாக அமைந்திருக்கிறது.

மொழிப் பிரயோகத்தில் ஏற்படும் தவறு எத்துணை விபரீதமாகிவிட முடியும் என்பதை எமது காவியங்கள் மூலம் கற்றுத் தேறியும், இன்றைய ஊடகங்களில் மொழிப் பயன்பாடு விடயத்தில் நாம் இன்னும் கவலையீனமாக இருப்பது ஏன்?

- கோ.ருஷாங்கன்

# பொருளாதாரத்திற்காக மழைக்காடுகள் அழித்தல்



பிரேஸில் உலகின் நுரையீரல் போன்ற நாடு எனச் சொல்லலாம். அமேஸன் மழைக்காடுகள்தான் இந்தப் பெயருக்குக் காரணம். கடந்த சில பத்தாண்டுகளில் இந்த மழைக்காடுகளை ஏகப்பட்ட அழிப்புக்கு உள்ளாக்கியவர்கள் பல பிரேஸில் நகரு கடத்தல் கும்பல்கள், குற்றக் கும்பல்கள், மேலும் ஆட்சியாளர்களின் துணையோடு காட்டு நிலத்தை பண்ணை நிலமாக மாற்றத் துடிக்கும் பெரு நிதிக்கிழார் கும்பல். இந்த நிதிக்கிழார் கும்பல் பன்னாட்டு விரிவு கொண்டது.

இந்த வாரம் ஒரு உள்ளூர் பணக்காரனைக் கைது செய்திருக்கிறது பிரேஸிலின் காவல் துறை. கடந்த சில வருடங்களில் அமேஸான் மழைக்காடுகளில் சுமார் 10 வீத பரப்பை அழித்த கயவன் இவன் என்பது குற்றச்சாட்டு. கிட்டத்தட்ட 1,872 சதுர மைல்களை இவன் காட்டை அழித்துக் கைப்பற்றி இருக்கிறான். இவனை இன்னும் வழக்கு நடத்திச் சிறையில் தள்ள எத்தனை ஆண்டுகள் ஆகுமோ.

அதற்குள் பிரேஸிலின் அரசு பதவியில் இருந்து இறக்கப்படாமல் இருக்க வேண்டும். காவல்துறையின் தீர்மானம் குலைக்கப்படாமல் இருக்க வேண்டும். சாட்சிகள் கொல்லப்படாமல் இருக்க வேண்டும். கடந்த கால நடவடிக்கைகளை வைத்துப் பார்த்தால் பிரேஸிலின் காவல்துறையோ, மைய அரசின் படையினரோ அப்படி ஒன்றும் நம்பத்தக்கவர்கள் இல்லை என்றுதான் தெரிகிறது.

கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றும் பெருமூச்சு விட முடியாது. அப்படி யாரும் இருப்பதாகத்தான் தெரியவில்லையே. அந்தக் கடவுள் நாம்தான், மக்கள்தான். நாமோ வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவு எண்ணிக்கையில் பெருகி உலகை ஆக்கிரமித்த போதும், போராசையில் மூழ்கி, நுகர்வாசையில் திளைத்து, நம் வேர்களை நாமே அறுத்துக் கொண்டு வருவதில் மிக முனைப்பாக இருக்கிறோம். புதிதாக எழுதப்படும் புனைவுகள் அனைத்துமே பாலையாகி விட்ட பூமிதான் எதிர்காலம் என்றே கதை சொல்கின்றன. உண்மையான கலியுகத்தின் துவக்கம் இதுதானோ?

# வெற்றிக்கு 19 வழிகள்



1. தினமும் அரை நாள் (12 மணி நேரம்) கடுமையாய் உழையுங்கள்.
2. வாய்ப்புகளை திறக்கும் சாவி மனப்பூர்வமான உழைப்புதான்.
3. வெற்றி ஒன்றையே மனம் நினைக்க வேண்டும்.
4. வெற்றி ஏணியில் ஒவ்வொரு படியாகத்தான் ஏற வேண்டும்.
5. ஒருமரத்தின் உச்சியை அடைய இரண்டு வழிகள் உண்டு. ஒன்று, யாராவது ஏற்றிவிடுவார்கள் என்று காத்திருப்பது. மற்றொன்று நாமே ஏறுவது.
6. சரியான வழி தெரிந்துவிட்டால் பிறகு எதற்கும் அஞ்சக்கூடாது.
7. பிடித்த காரியத்தைச் செய்ய வேண்டும் என்பதைவிட, செய்யும் காரியத்தை நமக்குப் பிடித்ததாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.
8. "முடியாது", "நடக்காது", "தெரியாது" என்ற வார்த்தைகளைச் சொல்லவே கூடாது.
9. பாதுகாப்பானது எனக் கருதி ஒரே இடத்தில் இருப்பது வளர்ச்சிக்கு ஏற்றதல்ல.
10. வெற்றிக்குத் தேவை பாதி சந்தர்ப்பம், பாதி அறிவு.
11. துணிச்சலாக முடிவுகள் எடுக்க வேண்டும்.
12. நீங்கள் சம்பாதிப்பதைவிட எதிர்பார்ப்பை அதிகமாக வைத்துக்கொள்ள வேண்டும்.
13. மற்றவர்களை உங்களுக்காக உழைக்க வைப்பதில் புத்திசாலித்தனம் தேவை.
14. வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.
15. நாளை என்று தள்ளிப் போடக்கூடாது.
16. கைக் கடிகாரத்தைக் கொடுத்துவிட்டு அலாரம் கடிகாரம் வாங்குங்கள்.
17. மற்றவர்கள் நம்மை வழிநடத்த வேண்டும் என்று நினைக்கக் கூடாது.
18. கவலைப்படாதீர்கள். கவலையால் எந்த நன்மையும் கிடைக்காது.
19. மகிழ்ச்சியைக் கொடுப்பது பணம் மட்டுமல்ல.

("பயனுள்ள புத்தகம்" என்ற நூலில்)

# அமெரிக்காவும் அதன் கொடியும்



அமெரிக்கா என்று சொன்னால், வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா என்ற பிரிவுகள் உள்ளன. தென் அமெரிக்கா, ஒரு பெரிய கண்டம். வட அமெரிக்கா ஒரு பெரிய கண்டம். இதற்கிடையில் இருப்பது மத்திய அமெரிக்கா. வட அமெரிக்காவில் வடக்குப் பகுதியில் கனடா என்ற நாடு உள்ளது. இடையில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்றழைக்கப்படும் நாடு உள்ளது. இதில் மொத்தம் 50 மாநிலங்கள் உள்ளன.

கனடாவுக்கும், மத்திய அமெரிக்காவுக்கும் இடையில் 48 மாநிலங்களும், கனடாவுக்கு மேற்கில் அலாஸ்கா என்ற மாநிலமும், பசிபிக் மகா சமுத்திரத்தில் உள்ள ஹவாய் தீவுகளும் சேர்ந்து மொத்தம் 50 மாநிலங்கள்.

இதனைச் சுருக்கமாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்று அழைக்கிறோம். இந்த நாட்டின் கொடியில் 50 நட்சத்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு மாநிலத்தைக் குறிக்கும். பொதுவாக எந்த நாட்டிலும் கொடியின் தன்மை மாறாது. இங்கு மாநிலங்கள் பெருகப் பெருக அதற்கேற்ப கொடியில் நட்சத்திரங்களைக் கூட்டி வந்துள்ளனர்.

("கண்டதும் கேட்டதும்" என்னும் நூலிலிருந்து)

# சினிமா சினிமா

✷ பாலாவின் இயக்கத்தில் உருவாகி வரும் "தாரை தப்பட்டை" படத்தின் மூலம் ஆயிரம் படங்கள் என்ற மைல் கல்லைத் தொடுகிறார் இளையராஜா. பால்கி இயக்கத்தில் அமிதாப், தனுஷ், அக்ஷரா நடித்த "ஷமிதாப்" படத்தின் இசை வெளியீட்டு விழா கடந்த மாதம் மும்பையில் நடந்தது. இவ்விழாவை ஆயிரம் படங்களுக்கு இசையமைத்து சாதனை புரிந்த இளையராஜாவுக்கான பாராட்டு விழாவாக பொலிவுட் உலகம் கொண்டாடியது. தமிழ் திரையுலகிலிருந்து ரஜினி, கமல் ஆகியோர் கலந்து கொண்டு இளையராஜாவுக்குப் புகழாரம் சூட்டினார்கள். இந்த விஷயத்தில் தமிழ்த் திரையுலகை பொலிவுட் உலகம் முந்திக் கொண்டது குறித்து கோலிவுட் பிரபலங்கள் வருத்தமடைந்துள்ளனர். "இளையராஜாவுக்கு நாம்தான் இந்த விழாவை முதலில் எடுத்திருக்க வேண்டும்" என்று பலரும் பேசிக் கொண்டனர். இதைத் தொடர்ந்து தயாரிப்பாளர் சங்கத் தலைவர் எஸ்.தாணு இளையராஜாவுக்கான பாராட்டு விழாவை நடத்துவதற்கான பணிகளில் தீவிரமாக இறங்கியுள்ளார். "இது ஒரு சாதாரண பாராட்டு விழாவாக மட்டுமல்லாமல் தென்னிந்திய திரையுலகமே இணையும் விழாவாக நடத்தப்பட இருக்கிறது. "தனியொரு மனிதனுக்கு ஆசியக் கண்டத்தில் நடத்தப்படும் பெரிய பாராட்டு விழா என்பதன் பதிவாக இது இருக்கும்" என தாணு தெரிவித்துள்ளார்.

✷ ஒஸ்கார், கிராமி விருதுகள் கொடுத்த வெளிச்சத்தின் காரணமாக வெளிநாட்டு இசை நிகழ்ச்சிகளில் அதிகமாகப் பங்கு கொள்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான். சினிமா பணிகளைத் துறந்து இதற்காக மாதக் கணக்கில் பயணங்களை மேற்கொள்கிறார். இந்த ஆண்டு 3 மாத கால பயணமாக வட அமெரிக்கா சென்றுள்ளார். ஜூன் 14 ஆம் திகதி வரை பல்வேறு இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். பிரேசில் கால்பந்தாட்ட வீரர் பீலேயின் வாழ்க்கைச் சரித்திர படத்துக்கு தற்போது இசையமைத்து வரும் ரஹ்மான், "ஜெய் ஹோ" பற்றிய செய்திப் படம் ஒன்றையும் உருவாக்கி வருகிறார்.

✷ சித்தி கொடுமையால் தலைமறைவான அஞ்சலி தமிழ் சினிமாவில் இருந்து விலகி இருந்தார். தெலுங்கில் வெங்கடேஷ், என்டி பாலகிருஷ்ணன் போன்ற மூத்த ஹீரோக்களுடன் நடிக்கவே அவருக்கு வாய்ப்பு வந்தது. இதையடுத்து பிரபலங்களின் குடும்ப விழாக்கள் மற்றும் சினிமா விழாக்களுக்கு அதுவரை இல்லாத கவர்ச்சி உடைகளை அணிந்து வந்து தனது கிளாமர் ஆர்வத்தை வெளிப்படுத்தினார். தற்போது சுராஜ் இயக்கும் "அப்பா டக்கர்" படத்தின் மூலம் கோலிவுட்டில் ரீ எண்ட்ரி ஆகிறார். இதில் முதல் ஹீரோயினாக த்ரிஷா நடிக்கிறார். டோலிவுட், கோலிவுட் அவருக்கு பெரிய அளவில் கை கொடுக்காததால் தற்போது மலையாளப் படங்களில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளார். புதிய படம் ஒன்றில் மம்முட்டிக்கு ஜோடியாக நடிக்கிறார். இதிலும் முதல் ஹீரோயினாக ஆண்ட்ரியா ஒப்பந்தமாகியுள்ளார். இதனால் சோர்விலுள்ளார் அஞ்சலி.




✷ 80களில் தமிழ், தெலுங்கு, மலையாள சினிமாக்களில் முன்னணி வரிசையில் இருந்தவர் ஷோபனா. 2000 ஆம் ஆண்டுக்குப் பின் சென்னை மற்றும் கேரளத்தில் நடனப் பள்ளியை நடத்தி வருவதுடன், ஏராளமான நாட்டிய நாடகங்களையும் நடத்தி வருகிறார். கடந்த ஆண்டு வெளியான 3டி அனிமேஷன் படமான "கோச்சடையான்" படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடித்தார் ஷோபனா. தற்போது ராம் சரண் நடிக்கும் "மை நேம் ஈஸ் ராஜு" தெலுங்கு படத்தில் அவருக்கு அம்மாவாக நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். தொடர்ந்து தமிழில் உருவாகும் மூன்று படங்களில் அவர் அம்மா கதாபாத்திரம் ஏற்று நடிப்பார் எனக் கூறப்படுகிறது.

✷ கமல் நடித்துள்ள, விஸ்வரூபம் - 2 மற்றும் உத்தம வில்லன் ஆகிய படங்கள் வெளியாகவிருக்கின்றன. இந்நிலையில், மலையாளத்தில் மோகன்லால் நடிப்பில், ஜீத்து ஜோசப் இயக்கிய, த்ருஷ்யம் படத்தின் தமிழ் ரீமேக்கான பாபநாசம் படத்தில் நடித்துள்ளார் கமல். இப்படத்தை இயக்கிய ஜீத்து ஜோசப்பை கமலுக்கு மிகவும் பிடித்து விட்டதால், அடுத்தபடியாக ஹிந்தியில் அமீர்கான் நடித்து வெளியான, பிகே படத்தை தமிழில் ரீ-மேக் செய்ய திட்டமிட்டு, அப்படத்தை இயக்கும் பொறுப்பையும், ஜீத்து ஜோசப்பிடம் கொடுக்க முடிவு செய்துள்ளார்.

✷ 25 படங்கள் என்ற மைல் கல்லை அடைந்துள்ளார் ஷாம். 13 வருடங்களுக்கு முன்பு விஜய்யின் நண்பராக "குஷி" படத்தில் சிறு கதாபாத்திரம் ஏற்றது இவரது சினிமா அறிமுகம். ஜீவாவின் "12 பி" படத்தின் மூலம் கதாநாயகனாக உயர்ந்த ஷாம் தமிழ், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட மொழி நடித்துள்ளார். 25ஆவது படமாக எஸ.பி.ஜனநாதனின் "புறம்போக்கு" அமைந்திருக்கிறது.

✷ "கதாநாயகனாக மட்டுமே நடிப்பேன்..." என்பதில் பிடிவாதமாக இருந்து வரும் வடிவேலுவை, லிங்கா படத்தில் ரஜினியுடன் நடிக்க கேட்ட போதே, 10 கோடி ரூபாய் சம்பளம் வேண்டும் என்று தடாலடியாக பேசினார். அதனால், அந்த வாய்ப்பு சந்தானத்திற்கு சென்றது. தற்போது, எலி படத்தில் கதாநாயகனாக நடித்து வரும் வடிவேலுவை, அட்லி இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்தில் நடிக்க வைக்க பேச்சு வார்த்தை நடக்கிறது. ஏற்கனவே விஜய்யுடன் இணைந்து வடிவேலு நடித்த, வசீகரா, பகவதி, போக்கிரி, காவலன் மற்றும் சச்சின் என பல படங்களின் காமெடி காட்சிகள் வெற்றியடைந்ததால், இந்த முயற்சியை எடுத்து வருகிறார் இயக்குனர் அட்லி.

✷ எஸ்.பி.ஜனநாதன் இயக்கத்தில் ஜீவா நடித்த படம் ஈ, இப்படத்தில், நயன்தாரா இவருக்கு ஜோடியாக நடித்திருந்தார். அப்படத்திற்கு பின், அவர்கள் ஜோடி சேராத நிலையில், மீண்டும் தான் நடிக்கும் புதிய படத்திற்கு, நயன்தாராவை ஒப்பந்தம் செய்யச் சொன்னார் ஜீவா. ஆனால், தற்போது பிசியாக இருக்கும் நயன்தாரா, மறுத்து விட்டார். அதனால், நயன்தாராவுக்கு இணையாக ஸ்ரீதிவ்யாவை, பில்லா கெட்டப்பில் நடிக்க வைக்க தயாராகி வரும் ஜீவா, "கோலிவுட்டின் அடுத்த நயன்தாராவை உருவாக்கிக் கொண்டிருக்கிறேன்..." என்று தன் நட்பு வட்டார நடிகர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பியுள்ளார்.



மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தரம் 6 மாணவர்களிற்கான கால் கோள் விழா அண்மையில் கல்லூரியின் முதல்வர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற போது விருந்தினர்களுடன் பெற்றோர் மற்றும் மாணவர்கள் அமர்ந்திருப்பதனைக் காணலாம் (63)

# வலி.வலயத்தில் சிறந்த பாடசாலையாக மானிப்பாய் இந்து தேசிய ரீதியில் கௌரவிப்பு

பாடசாலைகளின் உன்னத நிகழ்ச்சித் திட்டம் எனும் தொனிப பொருளில் பாடசாலைக்கல்வியினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம் எனும் அடிப்படையில் கல்வி அமைச்சின் தர உறுதிப்பாட்டு கிளையினால் ஒழுங்குபடுத்தப்பட்டு தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி தேசிய ரீதியில் கௌரவிக்கப் பட்டுள்ளது என மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

2011 ஆம் ஆண்டு சிறந்த செயற்பாட்டின் காரணமாக இலங்கை கல்வி அமைச்சினால் தேசியப்பாடசாலையாக தரமுயர்தப்பட்ட மானிப்பாய் இந்துக்கல்லூரி கல்வி அமைச்சின் தர உறுதிப்பாட்டு கிளையினால் ஒழுங்குபடுத்தப்பட்டு தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட சிறந்த பாடசாலைக்கான 2014 ஆம் ஆண்டுக்கான தெரிவில் வட மாகாணத்தில் எமது கல்லூரி வலிகாமம் வலயத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் சிறந்த பாடசாலையாக தெரிவு செய்யப் பட்டு தேசியமட்டத்தில் கௌரவத்தினைப் பெற்றுள்ளது. இக் கௌரவ வெற்றியானது கல்லூரியின் வளர்ச்சி சார்ந்து செயற்படுகின்ற ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் கல்லூரி சமூகத்தினர் அனைவருக்கும் கிடைத்த வெற்றியாகும் என்றார். (63)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் ஏப்ரல் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் றொமைக்குக் மண்டபத்தில் பழைய மாணவர் என்.தமிழழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சென்ற வருட பொதுக் கூட்ட அறிக்கை செயற்பாட்டறிக்கை கணக்கறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம் பெறும்.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் பா.பிரதீபன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கல்வி இராஜாங்க அமைச்சர் யாழ்.இந்துவுக்கு விஜயம்



யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் ஆர்.இராதாகிருஷ்ணன் யாழ்.இந்துக் கல்லூரிக்குச் சென்று எதிர்கால அபிவிருத்தி குறித்து கேட்டறிந்து கொண்டார்.

யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அமைச்சரை வரவேற்றனர்.

அத்துடன் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் குறித்தும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைகள் குறித்தும் அதிபர் அமைச்சருக்கு விளக்கினார். (48)

# அவலம் நிறைந்த வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(கரணவாய்)

உடுத்துறை முள்ளியான் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப் படாததால் அந்த வீதியால் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதி நீண்டகாலமாக திருத்தப்படாததால் பேருந்துகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் போக்குவரத்து செய்வோரும் வீதியால் நடந்து செல்வோரும், சைக்கிள்களில் செல் வோரும் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

அதுமட்டுமன்றி அந்த வீதியில் தூசு படலமாக காணப்படுவதால் இந்த மக்கள் தமது முகங்களை துணிகளால் மூடியவாறே பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் நோய் ஆபத்துக்களையும், விபத்துக்களையும் எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக அப்பகுதியிலுள்ள மக்களிடம் வினவிய போது இந்த வீதியைத் திருத்துமாறு பலரிடம் பலமுறை தெரிவித்தும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை அதுமட்டுமன்றி தேர்தல் காலங்களில் மக்களை சந்திக்க வரும் அரசியல் வாதிகள் தாம் செய்து தருவதாக வெறும் வாக்குறுதிகளை மாத்திரம் வழங்கிச் செல்கிறார்கள். ஆனால் எந்தவித பயனும் இல்லை என தெரிவித்தனர்.

மேலும் வடமராட்சி கிழக்குப் பகுதியில் பெரிய கட்டடங்கள், மருதங்கேணி பிரதேச செயலகம், வைத்தியசாலை போன்ற கட்டடங்கள் இருந்தும் பொதுமக்களின் போக்குவரத்துக்கு எந்த வித வசதியும் ஏற்படுத்திக் கொடுக்காதது கவலையளிப்பதாக தெரிவித்துள்ளனர்.

மக்கள் போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்ட இந்த வீதி 5 வருடங்களாகியும் இதே நிலையிலுள்ளது. கவலையளிப்பதாக தெரிவிக்கும் மக்கள் இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (18)

# வீதிகளில் கொட்டும் கழிவுகளை உடன் அகற்ற வேண்டும்

## நவாலி மக்கள் கோரிக்கை

நவாலி அராலித்துறை காக்கைதீவு வீதியில் கழிவுகள் கொட்டப்பட்டு அதனால் துர்நாற்றம் வீசுவதால் அவ் வீதியால் பயணிக்கும் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

வீதியின் இரு மருங்கிலும் குப்பை கூழங்கள் கொட்டப்படுவது மட்டுமன்றி விலங்குக் கழிவுகளாலும் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்..

இவ் வீதியால் பயணிக்கும் போது மக்கள் மூக்கைப் பொத்திய நிலையில் பயணிப்பதைக் காணக் கூடியதாக இருப்பதுடன் இதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதுடன் நோய்க்கான ஏது நிலையும் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்றவற்றில் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்கும் மக்கள் குறித்த வீதியில் கொட்டப்படும் கழிவுகளை உடனுக்குடன் அகற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

## முரசின் இன்றைய பலன்

(29.03.2015 ஞாயிற்றுக்கிழமை

ஜய வருஷம் பங்குனி மாதம் 15 ஆம் திகதி.

நவமித்திதி சித்தம் யோகம் கரிநாள்

புனர்பூச நட்சத்திரம் மு.ப.9.50வரை பின் பூசம்

இராகுகாலம் 4.43 - 6.13 வரை சுபநேரம் 9.13 - 10.43 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — விலங்கு குறுக்கே பாய்ந்த நிலையில் மயிரிழையில் விபத்தினின்றும் தப்பி விடல்

**ரிஷபம்** — ஆயுதங்களுடன் கவனமாகப் பழக முற்படுதல் காயத்தைத் தடுத்துவிடும்.

**மிதுனம்** — நண்பரின் உதவி ஒத்தாசையினால் பயண முயற்சி வெற்றிக்கம்பத்தை அடைதல்

**கடகம்** — நியாயத்தைக் காட்ட முற்பட்ட வேளை களேபரம் உருவாதல்.

**சிம்மம்** — பங்குத்தொழிலைக் கௌரவம் முன்னிட்டு முறித்துக் கொள்ள எண்ணமிடல்

**மீனம்** — ஆவணங்களைச் சரிபார்த்த பின்னர் காரியத்தில் இறங்க முற்படுதல்.

**கன்னி** — திருட்டுப் போன பொருட்கள் கைக்கெட்டும் செய்தி எட்டுதல்.

**கும்பம்** — சத்திரசிகிச்சையினால் நோயின் உபாதை அகன்று விடல்

**மகரம்** — பிதாவின் கருணையால் வர்த்தக நிலையம் திறக்க முற்படல்

**தனுசு** — டெங்கு ஒழிப்பில் குடும்ப சகிதம் சுற்றாடலைத் தூய்மைப்படுத்தல்.

**விருச்சிகம்** — மறைப்புச்செய்து கொணர்ந்து வரப்பட்ட பொருட்கள் சட்டத்தின் பிடியில் அகப்படல்.

**துலாம்** — வெளிநாட்டினின்று விவாகத்தை முன்னிட்டு பிள்ளைகள் வருகைதரல்.

# சிறுவர் விவகார அமைச்சின் ஊடாக சிறுவர்களுக்கு உதவி வழங்க ஏற்பாடு

## ரோசி சேனநாயக்க தெரிவிப்பு



சிறுபிள்ளைகளை நட்புடனும் பரிவுடனும் வழிநடாத்தி அவர்களை நல்ல நிலைக்கு இட்டுச் செல்வதன் மூலம் நாட்டில் நல்லதொரு எதிர்கால சந்ததியினை வளர்த்துக் கொள்ள முடியும். சிறுவர்கள் பல்வேறு வழிகளிலும் முன்னேற்றம் காண்பதற்கு எமது அமைச்சின் ஊடாக அவர்களுக்கு பன்முகப்பட்ட பல உதவிகளையும் வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். இவ்வாறு தெரிவித்துள்ளார் சிறுவர் விவகார அமைச்சர் ரோசி சேனநாயக்க.

நேற்று முன்தினம் இருபாலை தெற்கு ஞானஒளி சனசமூக நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் நட்புறவு நிலையத்தின் திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்த அமைச்சர் சிறுவர் நட்புறவு நிலையத்தினை திறந்து வைத்த பின்னர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உ ர் உரையாற்றுகையில்,

சி வர்களுக்காக இவ்வாற னதொரு நிலையத்தினை அமைத்து அவர்களது உரிமைகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய நிகழ்வில் கலந்து கொள்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன். சிறுவர்களுக்கு நாம் ஒவ்வொருவரும் அவர்களுக்குரிய கௌரவததினை அளிக்க வேண்டியது எமகுரிய கடமையாகும். சிறுவர்களின் மனங்களை புண்படுத்தக் கூடிய வகையில் நாம் நடந்து கொள்வதை தவிர்த்துக்கொள்வது அவசியமாகும். இன்றைய இளம் சிறார்களின் வளர்ச்சிக்காக பல்வேறு செயற்றிட்டங்கள் முனெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் மூலம் அனைத்துப் பிள்ளைகளும் பயன்பெற வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் சிறுவர் விவகார அமைச்சின் சிறுவர் விவகார ஆணையாளர் யமுனா பெரேரா, உதவி ஆணையாளர் நிர்மலி பிரியங்கனி, கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்துகொணடனர். (03)

# தொல்பொருள் அகழ்வு யாழ்.வாசிகள் மூவர் கைது

(வவுனியா)

வவுனியா- கனகராயன்குளம் பகுதியில் சட்டவிரோத தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தொல் பொருள் அகழ்விற்கு பயன்படுத்தக்கூடிய உபகரணங்களுடன் குறித்த சந்தேகநபர்கள் கடந்த வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்த நில்லயில் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியைசேர்ந்தவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# குருபூசை தினப் போட்டி

மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் நடாத்தும் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை குருபூசைத்தினப்போட்டி ஏப்ரல் 11ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை, குருபூசைத் தினப்போட்டி 2015 மேலைப்புலோலி என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (18)

# கல்வியில் வறுமையை ஒழிப்போம் நாம் நண்பர்களின் செயற்றிட்டம்



நாம் நண்பர்கள் அமைப்பினூடாக யாழ் மாவட்டத்தின் கலட்டி பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

நாம் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் 'கல்வியில் வறுமையினை ஒழிப்போம்' எனும் தொனிப்பொருளில் பல செயற்றிட்டங்கள் மூன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இதன் படி, கிடைக்கப்பெற்ற விண்ணப்பத்தின் அடிப்படையிலேயே யாழ். கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த இம் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் மதியம் கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதற்கான அனுசரணையினை புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் சண்முகநாதன் குருபரன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கலட்டி மெதடிஸத மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் ரவீந்திரராசா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் நாம் நண்பர்கள் அமைப்பின் செயலாளரும், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான க.உஷாந்தன், பொருளாளர் லி.தயாசுதன், உபதலைவர்களான நி.அலஸ்டீன், எஸ்.துளசிகரன், லி.தயாநிதன் நாம் நண்பர்கள் அமைப்பின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்டபலர் கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

குறித்த மாணவர்கள் கல்வி அடைவு மட்டத்தில காட்டும் முன்னேற்றத்திற்கேற்ப தொடர்ந்தும் கல்விக்கான உதவிகள் வழங்கப்படுமென நாம் நண்பர்கள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு வீட்டில் எப்போது பார்த்தாலும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே சண்டை வந்து கொண்டே இருந்தது. சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்கெல்லாம் மனைவி சண்டை பிடிப்பதாக கணவன் நினைத்தான். கணவன் சொல்லும் ஒரு வார்த்தைக்காக மனைவி பயங்கரமாகச் சண்டை போடுவாள். அதே வார்த்தையை மகனோ, மகளோ சொன்னாள் அமைதியாக இருப்பாள்.

ஒரு நாள் சண்டையில்லாமல் மகிழ்ச்சியாக இருந்த நாளில் கணவன் மனைவியிடம் அன்பாகக் கேட்டான்: "ஏன் தேவையில்லாததுக்கெல்லாம் என்னிடம் சண்டை போடுறாய்? பிள்ளைகளிடம் சண்டை போடுவதில்லையே?"

அதற்கு மனைவியும் அன்போடு சொன்னாள்: "உங்களிடம் தானே உரிமையாகச் சண்டை போட முடியும்?"

"அடிக் கழுதையே..."

"என்னையா கழுதை என்கிறாய்.... உனக்கு அவ்வளவு இளப்பமா நான்?"

மீண்டும் சண்டை ஆரம்பித்துவிட்டது.

*** *** *** ***

மிக எச்சரிக்கையாக நடந்து, ரகசியத்தை காப்பாற்றுவதாக நினைத்து, பெரிய பெரிய அரசுகள் கூட, அசட்டுத்தனமாய் நடந்து கொள்வதுண்டு...

இந்த விஷயம், இரண்டாம் உலக யுத்த காலத்திலே அமெரிக்காவில் நடந்தது. துருப்புகள் எல்லாம் எங்கே முகாமிட்டிருக்கின்றன என்பதை பரம ரகசியமாக வைத்துக் கொண்டிருப்பதே தேசத்துக்கு பாதுகாப்பு என்பது ராணுவத்தின் கொள்கையாக இருந்த சமயம் அது!

ஒரு அம்மையாருக்கு தொலைபேசி அழைப்பு வந்தது: தொலைபேசி ஒப்பரேட்டர் கூப்பிட்டு, 'நியூ ஓர்லியன்சில் இருக்கும ஒருவர் உங்களிடம் பேசவேண்டுமாம் ஆனால், அழைப்புக் கட்டணத்தை நீங்கள் தான் செலுத்த வேண்டியிருக்கும்... சம்மதமா...' என்றார்.

'அந்த அம்மணியோ, 'பேசுவது யார்...' என்று கேட்டாள். 'அது இராணுவ ரகசியம், சொல்ல மாட்டோம்...' என்று மறுத்து விட்டார் ஒப்பரேட்டர்.

'படையில் சேர்ந்திருந்த தன் மகன் தான் அப்படி உரிமையோடு பேச விரும்புகிறான் போலும் என்று ஊகித்தவள், சரியென்று ஒப்புக் கொண்டாள்; கனெக்ஷன் கிடைத்தது.

'எடுத்த எடுப்பிலேயே, 'நான் தான் ஜோர்ஜ் பேசுகிறேன் அம்மா...' என்று அவள் பிள்ளை, தன் பெயரைச் சொல்லி விட்டான். 'எங்கேயிருந்து பேசுகிறாய்?' என்று கேட்டாள் அம்மா. 'அதெல்லாம் ராணுவ ரகசியம் சொல்லக் கூடாது அம்மா...' என்றான் மகன்.

அதாவது... ஊர் பெயரை ஒப்பரேட்டர் சொல்லி விட்டார்: ஆள் பெயரை பிள்ளையே சொல்லி விட்டான். பிறகு எங்கிருக்கிறது ராணுவ ரகசியம்?

*** *** *** ***

கிராமமும் நகரமும் கலந்த சிறுநகரம் அது.

"எங்கே போனாலும், யாரைப் பார்த்தாலும் எனக்கு ஒத்து வரவில்லை. எனக்குப் பிடிக்காத மாதிரியே எல்லாரும் நடந்து கொள்கிறார்கள். எனக்குக் கோபம் கோபமாக, ஆத்திரம் ஆத்திரமாக எப்போதும் இருக்கிறது" என்று மனநல மருத்துவரிடம் வந்தார் ஒருவர்.

அமைதியாக அவரைப் பார்த்த மனநல மருத்துவர், "இந்த ரோட்டில் அரை மணி நேரம் நடந்துவிட்டு, அங்கே என்ன என்ன பார்த்தீர்கள்? என்று என்னிடம் சொல்லுங்கள்" என்றார் புன்முறுவலுடன்.

அவரும் அரை மணி நேரம் கழித்து வந்து தான் பார்த்ததை எல்லாம் மருத்துவரிடம் சொன்னார்.

"நாய்கள் தெரு முழுக்கச் சண்டை போட்டுக் கொண்டு ஓடியதை நீங்கள் பார்க்கவில்லையா? மாடுகள் ரோட்டின் குறுக்கே நின்று சாணி போட்டு அசுத்தம் செய்வதைப் பார்க்கவில்லையா?" என்று மருத்துவர் அமைதியாகக் கேட்டார்.

வந்தவர் தலையைச் சொறிந்தார்.

"மாடு, நாயெல்லாம் இருந்தது. என் கண்ணில் படவில்லை"

"நல்லது. உங்களுக்குப் பிடிக்காத செயல்களைச் செய்கிறவரையும் இதுபோல பார்க்காமல் இருந்துவிடுங்கள்" என்றார் மருத்துவர்.

*** *** *** ***

பூனைக்கி எத்தனை கால்?'

'நாலு கால்...'

'இல்லை... எட்டுக் கால்..... பூவில் இருக்கும் தேனை நக்கி குடிக்கிற, 'பூ நக்கி'யாகிய வண்டுக்கு எட்டுக் கால்... சரியா...'

'அப்படியா.... சரி, புறாவுக்கு எத்தனை கால்?'

'இரண்டு கால்தானே...'

'இல்லை... புறாவுக்கு ஒன்பது கால்... எப்படி தெரியுமா... 'ஒன்பது கால் (9x1/4) இரண்டே கால்'

# இலங்கைக் கடலில் மீன்பிடிக்க இந்திய மீனவருக்கு அனுமதி இல்லை

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை என மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,


இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை. இலங்கை கடற்பிரதேசத்திற்கு அனுமதியின்றி நுழைந்தால் கைது செய்யப்படுவார்கள்.

மீனவர் பிரச்சினை தொடர்பில் தொடர்ச்சியாக நாம் கலந்துரையாடினோம். இலங்கை கடற்பிரதேசத்தில் மீன் பிடிப்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.



அதற்கு இடமளிக்க முடியாது என நான் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளேன். அரசாங்கம் அதற்கு இடமளிக்காது. வடக்கு மீனவர்களுக்கு இந்த கடற்பிரதேசம் மிகவும் முக்கியம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சென்.ஜோண்ஸ் கல்லூரியில் தொழில்நுட்ப பாடத்திற்கு அனுமதி



(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்.ஜோண்ஸ் கல்லூரிக்கு க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான தொழில்நுட்பவியல் பாடத்துறையை ஆரம்பிப்பதற்கான உத்தியோக பூர்வ அனுமதியை கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன், அமைச்சின் செயலாளர் டக்ளஸ் நாணயக்கார ஆகியோர் இணைந்து நேற்றுமுன்திம் வழங்கி வைத்தனர்.

இப் பாடத்திட்டத்திற்கான கட்டடத்தையும் அதற்கான பொருட்களையும் பாடசாலை நிர்வாகம் தமது சொந்தப் பணத்தில் செலவு செய்து இந்தப் பாடத்திட்டத்தை இங்கு ஆரம்பிக்கவுள்ளது.

இந்தத் திட்டத்திற்காக 60 மில்லியன் ரூபா செலவு செய்யப்படவுள்ளதாக பாடசாலையின் அதிபர் வணக்கத்திற்குரிய ந.ஜோ.ஞானப்பொன் ராஜா தெரிவித்தார். 30 மில்லியன் ரூபா கட்டடத்திற்காகவும் மிகுதி 30 இலட்சம் ரூபா உபகரணங்களுக்கும் செலவு செய்யப்படவுள்ளது

இந்தப் பாடத்திட்டத்தில் பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் உயிர் முறையிலான தொழில் நுட்பவியல் ஆகிய பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசாங்க பாடசாலைகளில் இந்தப் பாடத்திட்டம், அரசாங்கத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 1000 பாடசாலைகள் வேலைத்திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சட்ட ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்

சட்ட ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார். ஆணைக்குழுவின் செயற்பாடு கடந்த 24ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வாவை தலைவராக கொண்ட இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக ஜனாதிபதி சட்டத்தரணி பாலித பெர்னாண்டோ, பேராசிரியர் லக்ஸ்மன் மாரசிங்ஹ, திருமதி தரா விஜயதிலக, கலாநிதி காமேன குணரத்ன, ஜே.எம். சுவாமிநாதன், ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஹர்ஷ கெப்ரல், ஜனாதிபதி சட்டத்தரணி இக்ரம் மொஹமட், ஜனாதிபதி சட்டத்தரணி சன்ஜீவ ஜெயவர்தன, என்.செல்வக்குமாரன், ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா, ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா, சட்டத்தரணி நவீன் மாரபன, சட்டத்தரணி திஸ்ஸத் விஜேகுணவர்தன, சட்டத்தரணி ஜி.ஜி. அருட்பிரகாசம் ஆகியோரே இவ்வாறு சட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமனக் கடிதங்கள் வழங்கும வைபவத்தில் ஜனாதிபதி சட்டத்தரணியான நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவும் கலந்து கொண்டார்.

# சிகிரிய மலை ஏற்றம் இயங்கு ஏணி அமைப்பு



சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி சிகிரிய மலை ஏறுவதை இலகுபடுத்துவதற்காக இயங்கு ஏணி முறையை பயன்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கலை, கலாசார இராஜாங்க அமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க சிங்கள ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சிகிரியாவிலுள்ள கற்களுக்கு சேதம் விளைவிக்காத வகையில் தொல்பொருள் ஆய்வாளர்கள் மற்றும் நிபுணர்களின் அறிவுரைகளுக்கமைய இவ் இயங்கு ஏணி பொருத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இயங்கு ஏணியை பயன்படுத்துவதினால் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகளும் சிகிரியாவிற்கு வருகை தரக்கூடும் என அமைசச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# துறைசார்ந்த அலுவலர்களை உடன் மாற்றம் செய்யுங்கள்

### மோசடி – ஊழல் அற்ற முன்னேற்றத்திற்கு முடிவாகும்

வடமாகாணம் 34 உள்ளூராட்சி சபைகளை (p.s, uc, mc) கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய 5 மாவட்டங்களை கொண்டது.

இந்த 5 மாவட்டங்களினதும் உள்ளூராட்சி சபைகளில் தற்போது சபை தவிசாளர், வடமாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களால் முக்கியமாக வினவப்படும் மாவட்டமாக யாழ்.மாவட்டம் (jaffna district) முதன்மை பெறுகின்றது.

இவ்வாறு யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகள் வினவப்படுவதற்கு காரணமாக இருப்பது கடந்த 5 ஆண்டு காலத்தில் உள்ளூராட்சி சபைகளில் வேலைத்திட்டங்களில் ஏற்பட்ட முரண்பாடு, மதிப்பீடுகளில் மாற்றம், வேலை இடம் பெறாமல் இடம்பெற்றதான மதிப்பீடு, ஒப்பந்தக்காரர்களின் தனிப்பட்ட தொடர்பு, இலஞ்சம், மோசடி, ஊழல் என பல தரப்பட்ட மோசமான முறைப்பாடுகள் வடமாகாண பேரவைக்கு குவிந்த வண்ணம் உள்ளன.

இவ்வாறு சபைகளை ஏமாற்றி பல அலுவலர்கள் பல மோசடிகளில் ஈடுபடுவதாக உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், மாகாண சபை உறுப்பினர், பேரவை மற்றும் வடக்கு முதல்வரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

குறிப்பாக கடந்த 4 ஆண்டுகளில் இடம்பெற்ற 'புறநெகும' திட்டங்களில் பல மில்லியன் ரூபா வேலை இடம் பெறாமல் நிதி கையாளப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இங்கு வடமாகாண சபை உறுப்பினர்களாகிய நாம் கூற வருவது யாதெனில் கடந்த 5 ஆண்டு கால மோசடிகளை விசேட குழு மூலம் ஆராய்வு செய்கின்ற அதேநேரம் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் வேலைசெய்கின்ற தொழில்நுட்ப அலுவலர்களை (யாழ்.மாவட்டத்தில் உள்ள) உடன் இடமாற்றம் செய்யவேண்டும்.

மேலும் கடந்த காலங்களில் ஊழலுக்கு வழிவகுத்துக் கொடுத்த சபைகளின் செயலாளர்கள், தவிசாளர்களையும் விசாரணை செய்யவேண்டும்.

இதனை முதலில் முற்றாக இல்லாமல் செய்வதற்கு மாவட்ட மட்டத்திற்கு உள்ளேயே தொழில்நுட்ப அலுவலர்களுக்கு இடமாற்றத்தை வழங்கினால் மட்டுமே உண்மையான நிலைபேறு இடம்பெறும்.

மாற்றங்கள் அபிவிருத்திக்கு வித்திடும், மாற்றமில்லாத நிகழ்வு மேலதிக மோசடிக்கு வழிவகுக்கும்.

**கனிஷ்டறூபன்**
**கௌரவ உறுப்பினர்**
**வடமாகாணம்.**

# 5,000 ரூபா போலி நாணயத்தாள் ஹட்டனில் சிக்கினார் ஒருவர்

(கொழும்பு)

5,000 ரூபாய் போலி நாணயத்தாளுடன் ஹட்டனில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே சந்தேக நபர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8.35 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மாத்தளையைச்சேர்ந்த 40 வயதானவர் என்றும் அவரை, ஹட்டன் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

46.யாரோ ஒருவன் செய்தபிழைக்கு உன்னை பழிவாங்குவது
(1).உப்பிட்டவனை உள்ளவரை நினை
(2).எய்தவன் இருக்க அம்பை நோவானேன்
(3).பட்ட காலிலே படும்

**(15).கீழ்வரும் விடுகதைக்கு விடை காணுங்கள்**

47.கொதிக்கும் கிணற்றில் குதிப்பான் கூச்சல் போட்டபடி குளிப்பான். உடல் பருப்பான். அவன் யார்?

..................................................................................................................

48.கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு, ஓட்டு வீட்டைப் பிரித்தால் வெள்ளை மாளிகை, உள்ளே குளம் அது என்ன?

..................................................................................................................

49.சிவப்புநிறச் சிங்காரி தண்ணீர்பட்டால் கறுப்பாகி உருக்குலைந்தாள் வெறுப்பாகி அவள் யார்?

..................................................................................................................

50.அள்ளும் போது சலசலக்கும் கிள்ளும் போது கண்கலங்கும் அது என்ன?

..................................................................................................................

**(16).பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் கூட்டின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது இடுங்கள்.**

51.சமாதானத்தின் குறியீடாக வெள்ளை அன்னம் கருதப்படுகின்றது ( )
52.குடிநீரில் கிருமிகளை அழிப்பதற்கு குளோரின் பயன்படுத்தப்படுகின்றது ( )
53.உணவு தயாரிக்கும் போது "ஏப்ரன்" மேலணி தரிப்பது அவசியமாகும் ( )
54.தேசிய கீதத்தைப் பாடும் போது உடலை நிமிர்த்தி நேராக வைத்துக் கொள்ள வேண்டும் ( )
55.இலங்கையின் தேசியப் பறவை காகம் ஆகும் ( )
56.அலுமினியப் பாத்திரங்களில் புளிப்பான உணவு வகைகளை தயாரிப்பதனால், உணவு நஞ்சுத்தன்மை அடைகின்றது ( )
57.நீரும், ஒட்சிசனும் துருப்பிடித்தலை ஏற்படுத்தும் காரணிகளாகும் ( )
58.பற்றீரியா, பங்கசு, வைரசு என்பன கண்ணுக்குத் தெரியாத மிகச் சிறிய கிருமிகள் ஆகும் ( )

**(17).ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்**

59.இதயத்துடிப்பினை அறிய உதவும் கருவி
(1).தேமோ மீற்றர் (2).ஸ்ரெதஸ்கோப் (3).பைனோகுலர் (4).ரெலஸ்கோப்

60.இறாலின் குருதியின் நிறம் எது?
(1).சிவப்பு (2).வெள்ளை (3).கறுப்பு (4).நீலம்

**நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

(01).1 - 4 விரும்பிய வசனம் (02).5.நன்றி 6.எப்படிச்சுகம் 7.மிகவும் நல்லது
(03).8.அத்த 9.அவியா 10.கப்புட்டா 11.மாலு (04).12.2 13.1
14.1 15.1 16.2 (05).17.கலப்பை 18.ஸ்ரீ லங்கா ரெலிகொம் 19.சூரியகாந்தி
20.மூங்கில் 22.முன்னால் வலதுபக்க வளைவு 23.காற்றுத்திசைகாட்டி 24.உப்பு கரைந்து நூல் நீரில் மிதக்கும் 25.100.00 26.21250 மி.லீ 27.3360சொற்கள் 28.3மீற்றர்
29.3 1 30.300.00 31. 32.வரைபை குறிக்க (06).34 - 39 விரும்பிய வசனம்
(07).40.3 41.2 (08).42.2 43.3 44.3 (09).45.3
46.3 (10).47.3 (11).48.3 (11).49.2 50.3

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 30 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

**(01).தரப்பட்ட வினாக்களைக் கொண்டு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01.A எனும் நாட்டில் பி.ப 3.00 ஆக இருக்கும் போது B எனும் நாட்டில் மு.ப 8.00 மணியாகும். ஆகவே B எனும் நாட்டில் பி.ப 3.00 மணியாக இருக்கும் போது A எனும் நாட்டி ்ன நேரமாக இருக்கும்?
(1).பி.ப 10மணி (2).மு.ப 10.00 மணி (3).மு.ப 8.00மணி

**(02).ஒரு குடும்பத்தில் நான்கு சகோதரர்கள் நான்கு மணித்தியாலயங்களில் செய்த பொம்மைகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து தரப்படும் வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிக.**

| | |
|---|---|
| பது - 8 பொம்மைகள் | சது - 12பொம்மைகள் |
| விது - 16 பொம்மைகள் | மது - 20பொம்மைகள் |

02.பது ஒரு மணி நேரத்தில் செய்த பொம்மைகள்?
(1).2 (2).4 (3).6

03.மது செய்த பொம்மைகளை பது செய்ய எவ்வளவு நேரம் எடுக்கும்?
(1).10மணி (2).8மணி (3).6மணி

04.விண்செலவு ஆயினும் அதனையும் அளவுடன் செய்தல் வேண்டும். என்ற கருத்தை உணர்த்தும் பழமொழி ?
(1).அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
(2).ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
(3).இளங்கன்று பயம் அறியாது

05.அடிக்கிற கைதான் அணைக்கும் என்பதன் கருத்து
(1).பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அடிப்பார்கள்
(2).தண்டிப்பவர்கள் அனைவரும் அணைப்பார்கள்
(3).பிறர் நலனில் அக்கறையுள்ளவர்கள் தண்டித்துத் திருத்துவார்கள்

**(03).தரப்பட்டுள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்கு பொருத்தமான ஒத்தகருத்துள்ள சொற்களைத் தெரிவு செய்க.**

06.பாடசாலை சென்ற மாணவர்கள் அக்கறையுடன் படித்தார்கள்
(1).பள்ளி ஆர்வம் (2).பள்ளி ஆசை (3).பள்ளி விருப்பம்

07.கமலா சுகயீனம் காரணமாக பாடசாலைக்கு கடந்த வாரம் செல்லவில்லை
(1).வருத்தம் நாட்கள் (2).நோய் தினங்கள் (3).நோய் கிழமை

08.மலைமகள் என்பதை இரகசியக்குறியீட்டில் எழுதினால்
(1).HYJFS (2).HYRHS (3).HYHFS

**(04).09 தொடக்கம் 11 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் A தொடக்கம் F வரையுள்ள ஆறு சொற்கள் தரப்பட்டுள்ளன. இச்சொற்கள் யாதாயினும் ஒரு முறைக்கமைய இரு கூட்டங்கள் ஆக்கப்பட்டுள்ளன. சரியாக கூட்டமாக்கப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.**

09.A - ஜப்பான் B - யாழ்ப்பாணம் C -காலி D - கனடா E - இரத்தினபுரி F - இலங்கை
(1).ABD,CEF (2).ADF,BCE (3).AFC,BDE

10.A - பலா B - பீற்றூட் C - கரட் D - மா E - லீக்ஸ் F - அப்பிள்
(1).ADF,BCE (2).ADB,DFC (3).ABD,CEF

11.A - மீன் B - கார் C - நங்கூரம் D - பஸ் E -குதிரை F - கப்பல்
(1).ABE,CDF (2).ACD,BEF (3).ABC,DE

(05). சரியான விடையைத்தெரிவு செய்து கோடிடுக

12. அண்ணா என்னைவிடக் கட்டையானவன் தம்பி அண்ணாவை விட உயர்ந்தவன். எனின், பின்வருவனவற்றுள் மிகச்சரியான கூற்று எது?
(1). தம்பியை விட அண்ணா கட்டையானவன்
(2). தம்பி என்னைவிடக் கட்டையானவன்
(3). அண்ணாவைவிட தம்பி கட்டையானவன்

13. ரஜீவன் வாழ்க்கையில் முன்னேறும் நோக்குடன் வியாபார முயற்சியில் ஈடுபட்டான். ஆயினும் அவனுக்கு வியாபாரத்தில் இலாபங்களைவிட நட்டங்களே கூடுதலாக இருந்தன. இக்கூற்று இதில் எதைக் குறிக்கின்றது?
(1). முதல் கோணல் முற்றும் கோணல்
(2). சாண் ஏற முழம் சறுக்கும்
(3). திக்கற்றவனுக்கு தெய்வமே துணை

14. 0.5இற்குப் பொருத்தமான பின்னம் எது?
(1). 1/2 (2). 1/4 (3). 3/4

15. கடிகாரத்தில் செங்கோணத்திலும் சற்று பெரியதைக் காட்டும் நேரம் யாது?
(1). 3 மணி (2). 06:30 மணி (3). 09:10மணி

(06). வெற்றுக்கூட்டில் வரவேண்டிய எண்ணை சரியாக இனங்கண்டு கோடிடுங்கள்

16. [1][2](5) [2][3](13) [3][4](?)
(1). 13 (2). 19 (3). 25

17. முன்றின் எதிர்ப்பக்கம் உள்ள இலக்கம் எது?
(1). 5 (2). 4
(3). 2

(07). 18 - 20 வரையுள்ள வினாக்களின் வெற்றிடங்களுக்கு பொருந்தக்கூடிய சொல்லின் கீழ்க் கோடிடுக

கடும் வெயிலின் அகோரம் தாங்க முடியாமல் (18).............................. வென நடந்து வந்த பாட்டி தண்ணீர் கிடைக்குமா என (19).............................. பார்த்து ஒரு மரத்தின் கீழ் (20)..............................

| | (1) | (2) | (3) |
|---|---|---|---|
| 18. | கட கட | மள மள | குடு குடு |
| 19. | ஆற அமர | சுற்றும் முற்றும் | அல்லும் பகலும் |
| 20. | இளைப்பாறினார் | தேடினார் | ஓடினார் |

(08). ரூபன் தனது வருமானத்தில் சகோதரர்கள் மூவருக்கும் குறிப்பிட்ட தொகையினை வழங்குகின்றான். ரூபன் தம்பிக்கும், தங்கைக்கும் கொடுக்கும் பணத்தின் அளவு சமனானது. ரூபன் அண்ணாவிற்கு தனது வருமானத்தின் காற்பங்கினைக் கொடுக்கின்றான்.

21. அவனது வருமானம் ரூபா 12,000 எனின் அண்ணாவிற்குக் கொடுத்தது எவ்வளவு? ..............................

22. தங்கைக்கும் தம்பிக்கும் கொடுத்தது தனது வருமானத்தின் மூன்றில் ஒரு பங்கெனின், தம்பிக்குக் கொடுத்தது எவ்வளவு? ..............................

(09). கீழ்வரும் பாடலை வாசித்து இல 23 முதல் 27 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுங்கள்.

01. அழிந்து போகும் உலகில் - பேர்
ஆசை கொண்டு மனிதன்
அயராதுடல் வருத்தி - தினம்
அலைவதேனோ பாவம்

02. ஆடி முடியும் வாழ்வில் - யாரும்
அள்ளிச் செல்வதில்லை
ஆளுக்கொரு நாளில் - இறைவன்
அழைத்திடுவான் நம்மை

03. ஆரழுது என்ன பயன் - உயிர்
ஆட்டம் நின்ற பின்னே,
அன்பு கொண்ட உறவுகள் - மெல்ல
அகன்று விலகி ஓடும்

04. அன்னை பிள்ளை அன்பு - உன்னை
ஆறு நாளில் மறக்கும்
ஆண்டவனின் தீர்ப்பில் - சிறு
அநீதி யென்பதில்லை



23. இப் பாடலுக்குப் பொருத்தமான தலைப்பின் கீழ் கீறிடுங்கள்
(1). பேராசை பெரு நட்டம் (2). இறைவன் தொழில் (3). மனிதன் வாழ்க்கை

24. வாழ்க்கை எப்படியானது? ..............................

25. 'அயராதுடல்' இதைப் பிரித்து எழுதுங்கள் ..............................

26. அள்ளிச்செல்வதில்லை என்பதன் கருத்து ..............................

27. இப்பாடலில் வரும் பெயர்ச்சொற்கள் இரண்டு எழுதுங்கள்
(1).............................. (2)..............................

(10). பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொல்லை எழுதுங்கள்

28. உயிர் - .............................. 29. அயராது - ..............................
30. பயன் - .............................. 31. ஆசை - ..............................

(11). இச் சொற்களுக்குரிய ஆங்கிலப்பதத்தை (ஆங்கில எழுத்தை உபயோகித்து) எழுதுங்கள்

32. பிள்ளை - .............................. 33. இறைவன் - ..............................
34. தினம் - .............................. 35. விருப்பம் - ..............................

(12). இச் சொற்களுக்குரிய சிங்களப்பதத்தை (சிங்கள எழுத்தை உபயோகித்து) எழுதுங்கள்

36. பாடசாலை - .............................. 37. அன்னை - ..............................
38. புத்தகம் - .............................. 39. அக்கா - ..............................

(13). பின்வரும் கூற்றுக்களை ஆதாரமாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்

(A) மாடி வீடுகளிலும், தொடர் மாடியிலும் இதை மேற்கொள்ள முடியும்
(B) குப்பைகளையும், எருவையும் பசளையாகப் பயன்படுத்தலாம்
(C) இடத்திற்கு இடம் இலகுவாக மாற்றலாம்
(D) பரந்த அளவில் பயிரிட முடியாது

40. வீட்டுத்தோட்டத்தின் பண்புகளில் ஒன்று
..............................

41. சாடிகளில் பயிர் இடுவதால் உள்ள நன்மைகள்
1. ..............................
2. ..............................

42. சாடிகளில் பயிர் செய்வதில் ஏற்படும் அனுகூலம் ஒன்றை எழுதுங்கள்
..............................

(14). பின்வரும் கருத்துக்களுடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

43. அறிவு நிரம்பியவர்கள் அதிகம் உளற மாட்டார்கள்
(1). முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்
(2). ஆழமறியாமல் காலை விடாதே
(3). நிறைகுடம் தழும்பாது

44. மோகன் தனது தோட்டத்தில் இருந்து பெற்ற வருமானத்தின் மூலம் குடும்பத்தோடு சந்தோஷமாக வாழ்ந்தான்
(1). சிறுதுளி பெரு வெள்ளம்
(2). வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
(3). போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

45. சாந்தி தனது பொருட்களை யாரிடமும் கொடுக்கமாட்டாள் தானும் பயன்படுத்தமாட்டாள்
(1). உண்ணாச்சொத்து மண்ணாய்போகும்
(2). சுடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது
(3). வைக்கோற்போர் நாய்

# சட்டவிரோத குடியேற்றத்திற்கு எதிரான அரசின் செயற்பாட்டிற்கு பாராட்டு



(கொழும்பு)

சட்டவிரோத குடியேற்றத்தற்கு எதிராக இலங்கை மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்கு அவுஸ்ரேலிய அரசு பாராட்டியுள்ளது.


இலங்கைக்கான அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் ரொபின் மூடி தலைமையில் நடைபெற்ற அவுஸ்ரேலிய அரசின் சர்வதேச மற்றும் வர்த்தக அலுவல்கள் திணைக்களத்தின் குடியகல்வு தொடர்பான உயர்ஸ்தானிகர் எண்ட்ரூ கொலோன்சின்விஸ்கி உட்பட அதிகாரிகள் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவை சந்தித்தபோதே இப்பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுக்க குடிவரவு குடியகல்வு சட்டத்தை திருத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் இதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் மனித வியாபாரம் தொடர்பில் இடம்பெறும் குற்றங்களை தடுக்க நீதிமன்ற அமைச்சின் தலைமையில் பொலிஸ், முப்படையினர், பாதுகாப்புப் படையினர், வெளி விவகார அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, மகளிர் விவகார அமைச்சு, சிறுவர் விவகார ராஜாங்க அமைச்சு, மக்கள் சமாதான அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு, நீதியரசர் திணைக்களம், மனித உரிமை ஆணைக்குழு மற்றும் சீர்த் திருத்த மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் ஆகிய அரச நிறுவனங்கள் இணைந்து மனித வியா பாரத்தை தடுக்க சட்ட நடவடிக்கை எடுத்துள்ளன.

இக்குற்றங்களில் சிக்கும் - அகப்படுபவர்களுக்கு உதவி செய்பவர்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை தொடர்பிலும் அவுஸ்ரேலிய. பிரதிநிதிகளிடம் அமைச்சர் விளக்கமளித்தார்.

# மாலக்கவின் கோரிக்கை நிராகரித்தது நீதிமன்றம்



முன்னாள் அமைச்சர் மேர்வின சில்வாவின் புதல்வர் மாலக்க சில்வாவிற்கு இரவு நேரகளியாட்ட விடுதிகளுக்கு செல்ல விதிக் கப்பட்டிருக்கும் தடையை நீக்குமாறு, அவர் விடுத்த கோரிக்கையை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பிரித்தானிய நாட்டைச் சேர்ந்த தம்பதியினரை கொழும்பில் உள்ள இரவுநேர களியாட்ட விடுதி ஒன்றில் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே நீதிமன்றம் அவரது கோரிக்கையை நிராகரித்துள் ளது. கடந்த 24 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, இரவு நேர களியாட்ட விடுதிகளுக்குச் செல்ல விதிக்கப்பட்டுள்ள தடை உட்பட சில நிபந்தனைகளை சத்தியக் கடிதம் மூலம் மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் மாலக்க சில்வாவுக்கு உத்தரவிட்டது.

# தகவல் அறியும் உரிமைச்சட்டம் அடுத்தவாரம் அமைச்சரவையில்

தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் எதிர்வரும் வாரம் கூடவுள்ள அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரச நிர்வாக மற்றும் பௌத்த விவகாரங்கள் அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை அடுத்து ஏப்ரல் மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாக அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள 19ஆவது திருத்தச் சட்டமூலத்தில் தகவலறியும் உரிமைச் சட்டம் அடிப்படை மனித உரிமைச் சட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்

சிவில் அமைப்புகள், ஊடகங்கள், புத்திஜீவிகள் ஆகிய பிரிவினர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை கொண்டு வரும்படி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் யோசனை ஒன்றை கடந்த 2010 ஆம் ஆண்டில் முன்வைத்திருந்தனர்.

இருந்த் போதிலும் அந்த யோசனை இதுவரை காலமும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படாதிருந்த நிலையில் அது அடுத்தவாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீதியோரங்களில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கும் பண அறவீடு

வவுனியா நகரப் பகுதியில் பிரதான வீதியோரங்களில் நிறுத்தப்படும் வாகன உரிமையாளர்களிடம் நகர சபையின் துணையுடன் தனியார் சிலர் பணம் அறவிட்டு வருகின்றனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. வவுனியா நகரப் பகுதியில் பொருள்களைக் கொள்வனவு செய்ய வருவோர் மற்றும் பாடசாலைகளுக்கு மாணவர்களை ஏற்றிச் செலல வருவோர் தமது வாகனங்களை வீதியோரங்களில் நிறுத்தி வருகின்றனர்.

அதனால் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படுவது ஒருபுறம், விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன. இவை ஒருபுறமிருக்க இவ்வாறு வீதியோரங்களில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு தரிப்பிட வாடகையாக 30 ரூபாவை சிலர் அறவிட்டு வருகின்றனர் என்றும், இதற்கு வவுனியா நகரசபை ஆதரவு வழங்குகிறது என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வாகன தரிப்பிட குத்தகையாளர் என்ற தனிப்பட்ட பெயர் பொறிக்கப்பட்டு பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு வரும் நிலையில் வாகன உரிமையாளர்கள் பலரும் பல்வேறு இடையூறுகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை, முச்சக்க வண்டிகளை வாடகைக்கு அமர்த்தி வரும்போது 80 ரூபா வாடகையாக பெறவேண்டிய நிலையில் 30 ரூபாவை இந்தக் குத்தகையாளருக்கும் வழங்க வேண்டியுள்ளதாகவும் முச்சக் கரவண்டி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# இலங்கை குறித்த விசாரணை ஐ.நா. குழுவிற்கு மேலதிக நிதி இல்லை

இலங்கை தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துவரும் ஐ.நா. குழுவுக்கு மேலதிக நிதி வழங்கப்பட மாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை மீதான விசாரணை அறிக்கை மார்ச் மாத ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வெளியிடப்படவிருந்தது.

எனினும் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அந்த அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை ஒத்திவைத்துள்ளார்.

இவ்வாறு விசாரணை அறிக்கை ஒத்திவைக்கப்பட்டமையானது நிதி நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என சைட் அல் ஹுசைன் (Zeid Ra'ad Al Hussein) தெரிவித்துள்ளார்.

இந்தக் காரணத்தினால் குறித்த விசாரணைக் குழு மேலதிக நிதியைக் கோர முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவின் நடவடிக்கைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதுமானதாக இருப்பதால் மேலதிக நிதியைக் கோருவதற்கான தேவைப்பாடு ஏற்படாதென ஐ.நா. திட்ட ஒத்துழைப்பு மற்றும் முகாமைத்துவ சேவைகள் அலுவலகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைத் தமிழர் படுகொலை இங்கிலாந்தில் நால்வர் கைது

இங்கிலாந்தில் கொவென்ரி பகுதியில் கொல்லப்பட்ட இலங்கைத் தமிழர் கொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களுள் ஒருவர் நேற்றுமுன்தினம் பர்மிங்காம் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் 5 ஆம் திகதி, இங்கிலாந்தின் மேற்கு மிட்லேண்ட் பகுதியில் 48 வயதான இலங்கைத் தமிழர், அருணாச்சலம் அருணோதயம் என்பவர், வீட்டினுள், பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

5 ஆம் திகதி, மாலையே அருணாச்சலம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்நிலையில், இந்தச் சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்து இங்கிலாந்து பொலிஸார் விசாரணை செய்து வந்தனர். பிரேதப் பரிசோதனையில், இவர் அடித்தே கொல்லப்பட்டுள்ளார் என்பதும் தெரியவந்தது.

பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில், சந்தேகத்தின் பேரில் பெட்வேர்த் பகுதியில் அமைந்துள்ள விடுதியில் பணியாற்றும் கிரிதாஸ் ஸ்ரீஸ்கந்தராஜா என்பவரை கைது செய்தனர்.

இதை அடுத்து இந்த வழக்கில், தமிழ் பெண் உட்பட மேலும் மூன்று பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

20 வயதான தமிழ்ப் பெண் விசாரணையின் பின் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# ஆயுத விற்பனையில் ஈடுபட்ட உதயங்க வீரதுங்க தலைமறைவு



உக்ரைனிலுள்ள ரஷ்ய ஆதரவுப் படைகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்த குற்றச்சாட்டை எதிர்கொண்டிருக்கும் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தலைமறைவாயிருப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த தகவலை வெளிவிவகாரப் பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது தெரிவித்துள்ளார்.

தூதுவராக கடமையாற்றிய பின்னர் பதவி விலகும்போது மேற்கொள்ளும் சம்பிரதாய நடவடிக்கைகளில் ஒன்றையும் அவர் இதுவரை செய்யவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்ய முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் ஆயுத விற்பனை தொர்டர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவிலிருந்து நாடு திரும்பியவுடன் முறையான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.


எவ்வாறாயினும் முன்னாள் தூதுவர் உதயங்கவினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் இந்த நடவடிக்கைகள் இதுவரை வெளியாகாதிருந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் உக்ரைன் அரசாங்கத்தினால் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

அவ்வாறு ஆயுத விற்பனை இடம்பெற்றிருந்தால் அந்த செயற்பாடானது இலங்கை மற்றும் சர்வதேச சட்டதிட்டங்களுக்கு முரணானது என வெளிவிவகாரப் பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

# யோகேந்திரா-பிரசாந்த் பூஷன் நீக்கம்

# கட்சியை சுத்தம் செய்தார் கெஜ்ரிவால்






(புதுடில்லி)

ஆம் ஆத்மி கட்சியின் தேசிய நிர்வாகக்குழுவில் இருந்து முக்கிய பிரமுகர்களான யோகேந்திர யாதவ் மற்றும் பிரசாந்த் பூஷன் நீக்கப்பட்டுள்ளனர். நீக்கம் ஜனநாயகத்தின் படுகொலை என யாதவ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆம் ஆத்மி கட்சியில் அரவிந்த் கெஜ்ரிவால் தன்னிச்சையாக செயற்படுவதாக கட்சியில் சில நிர்வாகிகள் குமுறினர். கட்சிக்கு எதிராகவும் அவர்கள் எதிர் கருத்துத்தெரிவித்து வந்தனர். இந்நிலையில் கெஜ்ரிவால் இருமல் 'காரணமாக பெங்களூர் சிறப்பு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுத் திரும்பினார். கட்சியில் குழப்பம் தமக்கு கவலை அளிப்பதாகவும், மக்களின் பணிகளில் கவனம் செலுத்தப்போவதாகவும் கூறினார்.

இந்நிலையில் நேற்று டில்லியில் ஆம் ஆத்மி கட்சியின் தேசிய நிர்வாகக் குழுக்கூட்டம் நடைபெற்றது கூட்டம் ஆரம்பிக்கும முன்னதாக யோகேந்திர யாதவ் மற்றும் பூஷனுக்கு எதிராக கெஜ்ரிவால் ஆதரவாளர்கள் கோஷம் எழுப்பினர். தனது ஆதரவாளர்கள் சிலரிடம் கூட்டதிற்கான முறையான அழைப்பிதழ் இருந்தும் அவர்கள் கூட்ட அரங்கிற்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை என கூறி யோகேந்திர யாதவ் சில நிமிடங்கள் கூட்ட அரங்கின் வாயிலில் அமர்ந்து தர்ணா போராட்டம் நடாத்தினார். பின்னர் தொண்டர்கள் அனுமதிக்கப்பட்டதை அடுத்து அவர் கூட்டத்திற்கு சென்றார்.

கூட்டத்தில் பேசிய கெஜ்ரிவால் யோகேந்திர யாதவ் மற்றும் பிரசாந்த் பூஷனின் பெயரை நேரடியாக குறிப்பிட்டு கடுமையாக தாக்கி பேசி உள்ளார். அவரது பேச்சிற்கு எதிர்ப்புத் தெரிவித்து யோகேந்திர யாதவ்வின் ஆதரவாளர்கள் கூட்டத்தை நடாத்த விடாமல் முழக்கமிட்டனர். இதனையடுத்து கெஜ்ரிவால் காரணம் ஏதும் கூறாமல் கூட்டத்தில் இருந்து வெளியேறிச் சென்றார்.




மேகதாது அணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருச்சியில் நடந்த ரயில் மறியலின்போது..

## உலகச் செய்திகள்

# வங்கதேசத்தில் அஷ்டமிதான விழா நெரிசலில் சிக்கி 10பேர் பலி

(டாக்கா)

வங்கதேசத்தில், "அஷ்டமி ஸ்நானம்" விழாவிற்கு வந்த, இந்து பக்தர்கள் 10 பேர், கூட்ட நெரிசலில் சிக்கி, பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

வங்கதேச தலைநகர் டாக்கா அருகே, லங்கல்பந் என்ற இடத்திலுள்ள நாராயணன் கோவிலை ஒட்டி, பிரம்மபுத்ரா நதி பாய்கிறது. இங்கு ஆண்டு தோறும் மார்ச் இறுதியில், "அஷ்டமி ஸ்நானம்" என்ற விழா, வெகுவிமரிசையாக நடை பெறுவது வழக்கம் இதேபோல் நேற்று முன்தினம் அஷ்டமி தினத்தை முன்னிட்டு, ஆயிரக்கணக்கான பக்தர்கள், பிரம்மபுத்ரா நதியில் ஸ்நானம் செய்ய வந்தனர். அவர்கள், குறுக்லான நதிக்கரையில் அமைந்த, இரு படித்துறைகள் வழியே, திபு திபுவென நதியை நோக்கி ஓடினர். ஒருவரை ஒருவர் முண்டியடித்து செல்ல முயன்ற போது, கூட்ட நெரிசல் ஏற்பட்டதில், கீழே விழுந்ததை கவனிக்காத பலர், அவர்களை மிதித்து விட்டு ஓடினர் ஒரு சிலர் மூச்சு திணறி மயங்கி விழுந்தனர். பொலிஸார் விரைந்து வந்து, கூட்டத்தை கட்டுப்படுத்தி, பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்த்த னர். இந்த விபத்தில், 7 பெண்கள் உட்பட, 10 பக்தர்கள் உயிரிழந்தனர்



இவர்களில் பெரும்பாலோர் முதியவர்கள்.என்பது குறிப்பிடத்தக்கது.

படுகாயமடைந்த, 50இற்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகினறனர். விழா அமைப்பாளர்கள், போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யாதது தான், இந்த விபத்திற்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

# இஸ்ரோவிற்கு காந்தி அமைதி விருது

இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகம் 'இஸ்ரோவிற்கு காந்தி அமைதி விருது வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இடம்பெற்ற தேர்வுக் குழுக் கூட்டத்தில் குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எச்.எல்.தத்து, மக்களவை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, எல்.கே.அத்வானி, மற்றும் கோபாலகிருஷ்ண காந்தி ஆகியோர் தேர்வுக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் என் குறிப்பிடப்படுகிறது.

விண்வெளி தொழில் நுட்பம் மற்றும் செயற்கைக்கோள் சேவை மூலம் இந்தியாவின் வளர்ச்சிக்கு 'இஸ்ரோ' ஆற்றிய பணிகளைப் பாராட்டும் வகையில், இஸ்ரோவுக்கு காந்தி அமைதி விருது வழங்கப்படவுள்ளது.

காந்தி அமைதி விருது, 1995ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அகிம்சை மூலமாக, சமூக, பொருளாதார, மற்றும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியவர்களை கௌரவிக்கும் முகமாக இந்த விருது வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போகோஹராம் தலைமையகத்தை அழித்தது நைஜீரிய இராணுவம்



நைஜீரியாவில் அட்டூழியம் செய்துவரும் போகோ ஹரம் தீவிரவாதிகளின் தலைமையகத்தை அந்நாட்டின் இராணுவம் நேற்று முன்தினம் தகர்த்து, அழிததது.

நைஜீரியாவில் அதிபர் தேர்தலுக்கான திகதி நெருங்கிவரும் வேளையில் இந்த தீவிரவாதிகளை முற்றிலுமாக அழித்து, ஒடுக்கி மக்களிடையே நல்ல பெயரையும், நம்பிக்கையையும் சம்பாதித்து, மீண்டும் ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற முடிவில் உள்ள அதிபர் குட்லக் ஜொனாத்தன், தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை முடுக்கி விட்டுள்ளார்.

இதன்விளைவாக, நாட்டின் பல பகுதிகளில் தீவிரவாதிகளுடன் இராணுவ வீரர்கள் வீராவேசமாக போரிட்டு வருகின்றனர். போகோ ஹரம் தீவிரவாதிகளின் பல பதுங்குமிடங்கள் தாக்கி அழிக்கப்பட்டு வருகின்றன. இந்த மோதலில் இருதரப்பிலும் ஏராளமானோர் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போராட்டங்கள்....

இராணுவ முகாம் இருந்த இடத்தில் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடமும் விவசாய பீடமும் இருக்கின்றன. ஆஸ்பத்திரிகளுக்கும் அலுவலகங்களுக்கும் பாடசாலைகளுக்கும் புதிய வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் இணக்க அரசியலின் மூலமே கிடைத்தன. வீதிச்செப்பமிடல் போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளும் இணக்க அரசியலின் விளைவுகளே. இணக்க அரசியல் பற்றிப் பேசிக்கொண்டு நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளை வலியுறுத்துவது இணக்க அரசியலின் பலனை அனுபவிப்பதற்கேற்ற வழியல்ல. அதேநேரம் உரிமைகளை விட்டுக்கொடுத்துச் சரணாகதி அடைவதும் இணக்க அரசியலல்ல.

கூட்டமைப்புத் தலைவர்கள் இதுவரையில் எத்தனையோ போராட்டங்களை நடத்திவிட்டார்கள். இராணுவத்தை வடக்கிலிருந்து வெளியேற்றுவதற்காகவும், மீள்குடியேற்றத்துக்காகவும் சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுவிப்பதற்காகவே இப்போராட்டங்கள் நடாத்தப்பட்டன. இனப்பிரச்சினையின் தீர்வை வலியுறுத்தி ஒரு போராட்டமாவது நடக்கவில்லை என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும். ஒரு நாள் முழுவதும் மக்களை வீதியில் இறக்கி நடத்திய போராட்டங்களால் தலைவர்கள் தங்கள் வாக்கு வங்கியைப் பாதுகாத்ததைத் தவிர வேறு எதுவும் நடக்கவில்லை. இப்படியான போராட்டங்களின் மூலமாக அல்லாமல் இணக்க அரசியலின் மூலமே இவ்வாறான விடயங்களைச் சாதிக்க முடியும் என்பதை இதிலிருந்து விளங்கிக்கொள்ளலாம்.

இராணுவப் பிரசன்னம் போன்ற பிரச்சினைகளுக்கான இறுதித் தீர்வு இனப்பிரச்சினையின் தீர்விலேயே தங்கியுள்ளது. எனவே, இணக்க அரசியல் மூலம் சில வெற்றிகளைப் பெறுகின்ற அதேவேளை இனப்பிரச்சினையின் தீர்விலும் கவனம் செலுத்த வேண்டும். நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமும், அரசியல் தீர்வுக்குச் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் முக்கியமானவை. தமிழ்த் தலைவர்கள் இவ்விரு விடயங்களிலும் சிறிதளவாவது அக்கறை செலுத்தாமலிருப்பது எப்போதும் பிரச்சினைகள் இருப்பதுதான் தங்கள் அரசியல் வாழ்க்கைக்கு உத்தரவாதம் என்று கருதுவதாலா?

இந்த அளவு
விளம்பரத்திற்கு
1000/= ரூபா மட்டுமே

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மீது அதிக கரிசனை காட்டப்படவேண்டும்



யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பெண்கள் விடயத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் குறிப்பாக தற்போது முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகளில் ஆரம்ப பிரிவில் கற்கும் சிறார்கள் யுத்த காலத்தில் பிறந்த சிறார்களே எனவே இவர்கள் விடயத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம் என நாடாளுமன்ற உறப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் நேற்று சிறுவர் பகல் பராமரிப்பு நிலையத்தினை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவிததுளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 86 இலட்சம் ரூபா செலவில் பகல பராமரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை வரவேற்கதக்கது. கடந்த காலத்தில் இந்த நிலையம் அமைக்கப்படுவதற்கான நிதி ஒதுக்கீடு மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்றதும் நாம் பச்சிலைப்பள்ளி கரந்தாயில் அமைப்பதற்கு சிபார்சு செய்திருந்தோம். அது உண்மையிலேயே மிகவும் பொருத்தமான இடத்தில் அமைந்துள்ளது.

நாம் இந்த பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்படுகின்றோம் எண்பதற்கு இதுவும் ஒரு உதாரணம். ஒரு குறுகிய காலத்திற்குள் கரந்தாய் பிரதேசம் புதுப பொழிவைப் பெற்றிருக்கிறது. இந்த பகல் பராமரிப்பு நிலையம் இப் பிரதேசத்திற்கு மிக அவசியமானதொன்று எனவே இதனை மக்கள் உரிய முறையில் பயன்ப்டுத்திக்கொள்ள வேண்டும். எனக்கேட்டுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்.

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் றோசி சேனாநாயக்க வடக்கில் உள்ள குறிபபாக கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற சிறுவர்கள் மற்றும் பெண்கள் நலன்களில் அதிக அக்கறை கொண்டவர் இது தொடர்பாக அவர் நாடாளுமன்றத்தில் பல தடவைகள் பேசியுள்ளார் இது அவர் எங்கள் மாவட்டம் மீது கொண்டுள்ள அக்கறையின் வெளிப்பாடே.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகளுக்கு போசாக்கு உணவு வழங்கப்பட வேண்டும் என சில மாதங்களுக்கு முன் இராஜாங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்கவிடம் கோரியிருந்தேன் அதற்கு அவர் தனது அமைச்சின் ஊடாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிததிருந்தார் அது இந்த மாவட்டத்தின் எல்லா சிறார்களுக்கும் கிடைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட நாடாளுமன்ற உறுபபினர்,

தற்போது உள்ள சிறார்கள் எல்லாம் யுத்த காலத்தில் பிறந்த சிறார்களே அந்த நேரத்தில் இந்த சிறார்களின் தாய்மார் சாதாரணமான உணவையே பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையில் காணப்பட்டனர். எனவே தான் இந்த சிறாாகளின் போசாக்கு விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் போசாக்கு மட்டுமன்றி இச்சிறார்களின் அனைத்து விடயங்களிலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும் யுத்தத்தினால் பாதிககப்பட்ட சிறார்கள் மற்றும் பெண்கள் விடயத்தில் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் இந்த நிலையம் தொடர்ந்தும் சிறப்பாக இயங்குவதற்கான ஆளணி மற்றும் இதர வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சா ரோசி சேனாநாயக்க, அமைச்சின் செயலாளர் திருமதி சுபசிங்க, அமைச்சின் சிறுவர் பிரிவுப் பணிப்பாளர் சந்திம சிகேரா, கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், பிரதேச செயலாளர்களான நாகேஸவரன், முகுந்தன், கிறிஸ்னேந்திரன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள், சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ரணில்...

தில் அரச அதிபர் மற்றும் உத்தியோகஸ்தர்களுடனான சந்திப்பொன்றை நிகழ்த்தவுள்ளதோடு,

மாலை 3.00 மணிக்கு முல்லைத்தீவு மூவட்டத்திற்கான ஐக்கிய தேசிய கட்சி அலுவலகத்தை திறந்துவைக்கவுள்ளதாக கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ' இந்திரன் சஜிந்திரன் தெரிவித்துள்ளார்.

## புலிகளுக்கு...

தார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு விதிக்கப்பட்ட தடையை ஐரோப்பிய ஒன்றியம், நீடித்துள்ளமை வெற்றி என்றும் அதற்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தான் நன்றி தெரிவிப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

மனித உரிமை மீறல் தொடர்பில் ஐ.நா.வில் ஏற்பட்டிருந்த சவாலை வெற்றிகொள்ள புதிய அரசால் முடிந்துள்ளதாகவும் இந்த நடவடிக்கையில் மேலும் முன்னோக்கிச் செல்ல வேண்டியுள்ளதெனவும் அவர் குறிப்பிட்டார். தமிழ் மக்களுக்கு தங்களுடைய காணியில் வாழ்வதற்கு விருப்பம் இருக்கும் என்பதால் அவர்களை அவர்களது காணியில் மீள்குடியேற்ற வேண்டும் எனவும் அவர் கூறினார்.

நாட்டில் யுத்தம் முடிந்துள்ள நிலையில் தற்போதும் கடந்த யுத்த காலத்தைப் போல வாழ முடியாது என்றும் எதிர்காலத்தை நோக்கிச் சிந்திக்க வேண்டியுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். நாட்டில் பயங்கரவாத யுத்தம் ஏற்படக் காரணமாக இருந்த அரசியல்வாதிகள் இன்று ஒன்றுசேர்ந்துள்ளதாகத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அமைச்சரவையில் இணைந்து கொண்டது மகிழ்ச்சி அளிப்பதாகவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் அனைத்து கட்சிகளும் ஒன்று சேர வேண்டும் என்பது தமது எதிர்பார்ப்பு என பிரதமர் குறிப்பிட்டார். இலங்கை பாதுகாப்பு தரப்பினர் ஆங்கிலம் மற்றும் கணனிக்கல்வியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் எதிர்கால நாட்டின் முன்னேற்றத்திற்கு அது பங்களிப்புச் செய்யும் என்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

## தாதியர்கள்...

மத்திய சுகாதார அமைச்சினால் வட மாகாண சுகாதார அமைச்சுக்கு 160 தாதிய அலுவலர்கள் வழங்கப்படவுள்ளனர். இவர்கள் உடனடியாக மாகாண அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசாலைகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு நியமனம் செய்யப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மைத்திரியின்...

அவரது தலையின் பின்புறப் பகுதி பாரிய சேதத்திற்கு உள்ளான நிலையில் மருத்துவர்கள் நீண்டநேர போராட்டத்தின் பின்னர் சத்திரசிகிச்சையை மேற்கொண்டிருந்தனர்.

எனினும் அவர் சிகிச்சைப் பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவரது இறுதிக் கிரிகைகள் நாளை பொலனறுவை பொது மயானத்தில் நடைபெறும் என உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

# யாழ். போதனாவைத்தியசாலையை தரம் உயர்த்த நடவடிக்கை

யாழ்.போதனா வைத்தியசாலையினை இலங்கையில் முதற்தர வைத்தியசாலையாக மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக சுகாதார இராஜாங்க அமைச்சர் ஹசின் அலி தெரிவித்துள்ளார்.

யாழிற்கு நேற்று சனிக்கிழமை விஜயம் மேற்கொண்ட அமைச்சர் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா மற்றும் பிரதிப்பணிப்பாளர் செ.பவானந்தராஜா மற்றும் வைத்தியர்களைச் சந்தித்து கலந்துரையாடியதுடன், யாழ். போதனா வைத்தியசாலையின் குறைகள் பற்றிக் கேட்டறிந்து கொண்டார்.

அதன்போது, யாழ். போதனா வைத்தியசாலையினை இலங்கையில் முதற்தர வைத்தியசாலையாக மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், வைத்தியசாலையில் நிலவும் கட்டட பற்றாக்குறையினையும் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தெல்லிப்பளை மற்றும் பருத்தித்துறை, சாவகச்சேரி போன்ற ஆதார வைத்தியசாலைகளையும் சென்று பார்வையிட்டதுடன், வைத்தியசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்துகொண்டார். (25)

# வடக்கு கல்வி அபிவிருத்திக்கு அமைச்சரவைப் பத்திரம் கோருகிறார் ரணில்

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்த கூட்டு அமைச்சரவை பத்திரம் ஒன்றினைச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை ஒன்றினை முன்வைத்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற வடமாகாண கல்வி அதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கல்வி அமைச்சும் மீள்குடியேற்ற அமைச்சும் இணைந்து இந்த கூட்டு அமைச்சரவைப் பத்திரமொன்றினை தாக்கல் செய்யுமாறு தெரிவித்ததுடன், வடமாகாணத்தில் கல்வி செயற்பாடுகளில் வீழ்ச்சி காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், கொழுப்பு மாவட்டத்துடன் ஒப்பிட்டு பார்க்கும் போது, வடமாகாணப் பாடசாலை மாணவர்களுடையே கல்வி செயற்பாடுகள் போட்டி அற்ற நிலையில் காணப்படுகின்றதாகவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் கல்வீ நடவடிக்கைகளில் முன்னேற்றத்தினை ஏற்படுத்திப் பாடசாலைகளுக்குத் தேவையான வளங்களை அதிகரிக்கச் செய்து, கல்வியின் தரத்தினை முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென கல்வி அதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். (25)

## யாழ்.இளைஞர்கள்...

பூர்வ விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யாழ். மாவட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகளை யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து காணப்படுகிறது. பொலிஸார் பாராமுகமாக உள்ளனர் என சிவில் சமூக பிரதிநிதிகள் தெரிவித்தனர். இதற்கு உங்களுடைய பிரச்சினைகளை நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள். விரைவில் யாழ். மாவட்டத்தில் 200 இளைஞர்களையும் 200 யுவதிகளையும் பொலிஸில் இணைத்துக் கொள்ளவுள்ளோம்.

இங்குள்ள இளைஞர், யுவதிகள் பொலிஸில் இணைய நீங்கள் வழி செய்ய . வேண்டும். இதன் மூலம் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கலாம் என பிரதமர் தெரிவித்தார்.

## கிராமிய...

னம் இரண்டு மடங்காக அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாகவும் அதுமட்டுமன்றி தாம் சார்ந்து வாழும் சமூகத்தை ஒரு ஒழுங்குமுறைக் கட்டுக்கோப்புக்குள் வைத்திருப்பதுடன் பெண்களுக்கான தலைமைத்துவத்தையும் ஐக்கியத்தையும் வளர்க்கும் அதேவேளை பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

எனவே தாம் வாழும் சமூகத்தின் நலன்சார்ந்து கிடைக்கப் பெறக்கூடிய உள்ளூர் வளங்களை சரியான முறையில் பயன்படுத்தும் பொருட்டு அதற்கான திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்தி அதிக நன்மைகளையும் வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமன்றி தாம் வாழும் பகுதிகளில் சிறிய வீட்டுத் தோட்டங்களை அமைப்பது, கால்நடைகளை வளர்ப்பது மற்றும் பெண்கள் ஏற்கனவே பெற்றுக்கொண்ட தொழிற்றுறை சார்ந்த பயிற்சிநெறிகளினூடாகவும், செயற்றிட்டங்கள் ஊடாகவும் பயன்களைப் பெற்றுக்கொள்வதற்கு கிடைக்கப்பெறுகின்ற சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்திக் கொண்டு பெண்கள் வாழ்வாதாரத்திலும் பொருளாதாரத்திலும் முன்னேற்றம் காண வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் உள்ளூர் மூலப்பொருட்கள் மற்றும் தென்பகுதியிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற மூலப்பொருட்களைக் கொண்டு காலத்திற்கு ஏற்ற வகையில் நவீன வடிவமைப்புக்களைக் கொண்ட உற்பத்திகளை முன்னெடுக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இவ்வாறு கிராமியப் பொருளாதாரத்தின் மேம்பாட்டிற்கும் உயர்விற்கும் பெண்களின் பங்கு காத்திரமானது என்பதை உணர்ந்து கொண்டவர்களாக தாம் சார்ந்து வாழும் சமூகத்தை மேலும் முன்னேற்றம் காணச் செய்வதற்கு பெண்கள் சமூக அக்கறையுடன் உழைக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

# புதிய தேர்தல் முறைமை அரசியல் கட்சிகளின் ஒன்றுகூடல்

## நாளை மறுதினம் கொழும்பில்

உத்தேச தேர்தல் முறை மாற்றம் தொடர்பான அடுத்தகட்டப் பேச்சு நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

இந்த பேச்சு அலரிமாளிகையில் நடைபெறவுள்ளதாக பௌத்த விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

அன்றைய தினப் பேச்சுக்களில் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, நாடாளுமன றத்தைப் பிரதிநிதித்துவப்ப டுத்தும் அரசியற்கட்சிகள் ஆகியோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உத்தேச தேர்தல் முறை மாற்றத்திற்கு பெரும்பான்மைக் கட்சிகள் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்ற நிலையில் அடுத்த வாரம் நடைபெறும் இந்தப் பேச்சில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை தேர்தல் முறை மாற்றத்தை 20ஆவது சட்டமூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்றை கலைக்கத்தவறினால் வீதியில் இறங்கிப் போராட்டம்

(கொழும்பு)

ஏற்கனவே திட்டமிட்டபடி நாடாளுமன்றை கலைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இல்லையேல் அரசுக்கெதிராக பொது மக்களின் ஆதரவுடன் வீதியில் இறங்கிப் போராட்டம் செய்யப்போவதாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதயகம்மன்பில தெரிவித்தார்.

புதிய அரசின் நூறுநாள் திட்டத்தின் முடிவில் நாடாளுமன்றமும் கலைக்கப்பட வேண்டும். என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் நாடாளுமன்றை கலைக்குமாறு முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். அவ்வாறு நாடாளுமன்றம் கலைக்கப்படாவிட்டால் பாரியளவில் போராட்டங்களை நடத்த நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மஹிந்தவை பிரதமராக்கும் அமைப்பு ஒன்று நிறுவப்பட்டுள்ளதாகவும் பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார்.

ஜே.என்.பி., மஹஜன ஐக்கிய முன்னணி, புதிய இடதுசாரி முன்னணி மற்றும் பிவித்துரு ஹெல உறுமய ஆகிய கட்சிகள கூட்டாக இணைந்து இந்த அமைப்பை உருவாக்கியுள்ளது.



நாடாளுமன்றை கலைக்குமாறு கோரும் இந்தப் போராட்டங்களுக்கு பாரியளவில் மக்கள் பங்கேற்பார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# இந்திய வியாபாரிக்கு 10 ஆயிரம் தண்டம்

(கரணவாய்)

சுற்றுலா விசாவுடன் இலங்கை வந்த இந்திய புடவை வியாபாரி ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

இவ்வாறு இந்த இந்தியர் புடவை வியாபாரத்தில் ஈடுபடும் போது நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் விற்பனைக்கு கொண்டு வந்த புடவைகள் அனைத்தும் அரசுடமையாக்கவும் உத்தரவிடப்பட்டது. (18)

# காகித ஆலையில் தொடரும் போராட்டம்

## ரயரகள எரிததகால களேபரம

வாழைச்சேனை காகித ஆலை ஊழியர்கள் தங்களது கடந்த ஐந்து மாதங்களுக்கான சம்பள் நிலுவைப் பணத்தை வழங்குமாறு கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று தொடர்ந்து 14 நாளாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் போது கடந்த 25 ஆம் திகதியிடப்பட்ட தொலைநகல் ஒன்றினை ஆலையின் தவிசாளரினால் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அதில் தங்களது நிலுவைப் பணம் வியாழக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் ஒப்பமிடப்பட்டு தொலைநகல் ஒன்றினை அனுப்பியிருந்தார்.

இதன் பிரகாரம் கடந்த வெள்ளிக்கிழமை சம்பள நிலுவை வழங்குவதில் சிறிது தாமதம் ஏற்பட்டிருந்தது. மாலை 4 மணிக்கு பின்னர் 2015 ஆம் ஆண்டிற்கான 3 மாத நிலுவைச் சம்பளம் (ஜனவரி, பெப்ரவரி, மார்ச்) வாழைச்சேனை ஆலையின் வங்கி கணக்கிற்கு வைப்பிடப்பட்டுள்ளதாக கொழும்பு தலைமைக் காரியாலயத்தின் நிர்வாகத்தினரினால் தகவல் வழங்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை ஆலையின் பதில் முகாமையாளர் தெரிவித்தார்.

இத்தகவலை கேள்வியுற்ற தொழிலாளர்கள் ஆத்திரம் அடைந்து நேற்று ஆலையின் முன் கதவினை மூடியும், டயர்களை எரித்தும் ஆலையின் முகாமை நிர்வாகத்தினரை வெளியில் செல்ல விடாது தடுத்து சுமார் ஒரு மணித்தியாலயம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

# அம்பகாம மம்மில் பிள்ளையார் மஹாகும்பாபிஷேகம்

முல்லைத்தீவு அருள்மிகு அம்பகாம மம்மில்பிள்ளையார் ஆலயத்தின் புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது.

இந்த ஆலயத்தின் கிரியைகள் 03.04.2015 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 04.04.2015 முதல் 05.04.2015 வரை சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் எண்ணெய்க் காப்புசாற்றலும் 06.04.2015 ஆம் திகதியன்று திங்கட்கிழமை காலை 09.18 - 10.20 மணி வரை உள்ள இடப லக்கினமும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுப வேளையில் கும்பாபிஷேக வைபவம் நடைபெற உள்ளது. அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு ஆலய பரிபாலன சபையின் கோரியுள்ளனர்.

# ஹஜ் யாத்திரை ஏற்பாடுகள் மும்முரம்

(கொழும்பு)

ஹஜ் ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக முஸ்லிம் விவகார மற்றும் தபால் சேவை அமைச்சர் எம். எச். அப்துல் ஹலீம் தலைமையிலான குழு நாளை மறுதினம சவுதி அரேபியா செல்லவுள்ள்தாக தெரிவிக்கப்படுகின்றது.

சவுதி அரேபியா ஹஜ் விவகார அமைச்சருக்கும் முஸ்லிம் சமய விவகார அமைச்சருக்குமிடையிலான சந்திப்பு ஏப்ரல் முதலாம் திகதி இடம்பெற இருப்பதாகவும் முஸ்லிம் விவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# யாழ்-முஸ்லிம்களுடன் பிரதமர் ரணில் சந்திப்பு



மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ் வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் யாழ் முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தார்.

இதன் போது பள்ளிவாசல் நிர்வாகத் தலைவரும் ஐ.தே கட்சியின் யாழ் மாவட்ட சிரேஸ்ட முக்கியஸ்தருமான எம்.சி.எம்முபீன் வரவேற்றதுடன் பிரதமரிடம் யாழ் முஸ்லீம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாக எடுத்துக் கூறினார்.

அவ்வேளை மீள் குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனை அழைத்து யாழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினை தொடர்பாக விசேட கவனம் செலுத்துமாறும் பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் இதற்கு உதவியளிக் குமாறும் கேட்டுக்கொண்டார்.

அடுத்து யாழ் கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளன அங்கத்தவர்களினால் பிரதமருக்கு மகஜர் ஒன்றும் அங்கு கையளிக்கப்பட்டது.

அம்மகஜரில் யாழ் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் முக்கியமான சில கோரிக்கைகளை உள்ளடக்கப்பட்டிருந்தன.

அத்துடன் அப்பகுதிக்கு வந்திருந்த சுகாதார இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமுமான ஹசன் அலியும் பிரதமர் மற்றும் அமைசர் சுவாமி நாதனிடம் யாழ் முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக விசேட கவனம் எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

# மரண அறிவித்தல்



## அமரர் நவரத்தினம் சாம்பசிவம்

*(Former security officer jaffna college (Vaddu) Technical Institute)*

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் நவாலி வடக்கு புலவர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு நவரத்தினம் சாம்பசிவம் (சிலம்படி வித்தகர்) நேற்று முன்தினம் (27.03.2015) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பென்னையா நவரத்தினம்-வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா-அழகரத்தினத்தின் அன்பு மருமகனும் சந்திரகாந்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தெய்வேந்திரம், இந்திராணி, செல்வராணி, தியாகராசா, ரவீந்திரன், பாஸ்கரன், புஸ்பராணி, காலஞ்சென்ற யோகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவபாக்கியம், சிதம்பரநாதன், வேந்தனார், அழகம்மா, சோதிமயம், சிஜயசித்திரா (ஆசிரியை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்.) காலஞ்சென்ற பஞ்சலிங்கம், அமரர் செல்வராஜா-செல்வராணி (HSCUMF), அமரர் நவரத்தினம் இந்திராணி (ஓய்வூதியர்) கதிரைமலை ஜெயராணி, இளங்கோ-பாலகௌ ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பிர ஷ் (மாணவத்தலைவன்-நவாலி மகாவித்தியாலயம்) சஞ்சுதா (ஜேர்மனி), ஜீவிதா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரராஜா (ஜேர்மனி), கஜிதன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுஷா, விதுஷா, மதுரா, விதுரா, டெனிஷ், ஓவியா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29.03.2015) ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடன் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்து செல் லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

**புலவர் வீதி**
**நவாலி வடக்கு**
**மானிப்பாய்**

**தகவல்**
**சந்திரகாந்தி, (மனைவி),**
**0776019468**

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.